www.padippakam.com

# சிங்கள பௌத்த இனவெறி தீவிரவாதம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பொன்னி

□

சிங்கள-பௌத்த
இனவெறி, தீவிரவாதம்
பீட்டர் சல்க்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

PETER SCHALK

# 'UNITY' AND 'SOVEREIGNTY'

## Key Concepts of militant Buddhist Organizations in the Present Conflict in Srilanka

படிப்பகம்

www.padippakam.com

PETER SCHALK
Professor in the history of religions,
University of Uppsala, Sweden.

□

Writen on behalf of the International Peace Research Institute Oslo, for the Volume Ethnic Conflict Human Rights and Development. May 1987.

To appear in October 1987.

□

Tamil : First Edition June, 1988

□

Ponni Books, 12 First Main Road,
Nehru Nagar, Adyar, Madras-20.

படிப்பகம்

www.padippakam.com

# பௌத்த
# சிங்கள
# இனவெறி, தீவிரவாதம்

*பீட்டர் சல்க்*

*பொன்னி*

படிப்பகம்

www.padippakam.com

□ பௌத்த சிங்கள இனவெறி, தீவிரவாதம்
□ பீட்டர் சல்க் □ தமிழில் : நாகார்ஜுனன்
□ முதல் பதிப்பு : 1988 ஜுன், விலை : ரூ. 5

□

அச்சு : இராசகிளி பிரிண்டர்ஸ், சென்னை-20

□

வெளியீடு : பொன்னி புக்ஸ், 12 முதல் பிரதான சாலை, நேருநகர், அடையாறு, சென்னை-20

பொன்னி நிறுவனத்திற்காக வெளியிட்டவர்: வைகறை

படிப்பகம்

ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களின் அனைத்து அரசியல் கட்சிகளும் குழுக்களும் எப்படி இவ்விதம் ஒன்றுபட்டு நிற்கின்றன? என்று புரியாத புதிராகப் பலர் கருதுகிறார்கள்.

சிங்கள உழைக்கும் மக்களும் தமிழ்ப்பாட்டாளிகளும் ஒன்று பட்டு புதிய ஜனநாயக மாற்றத்தை வென்றெடுக்கும் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று பெரும்பாலான இந்திய இடதுசாரிப் பிரிவினர் கருத்துரை வழங்குகின்றனர்.

இந்த இரண்டு போக்குகளுக்கும் இந்நூல் ஓரளவு தெளிவைத்தருகின்றன.

தமிழ்த்தேசிய இனத்தின் மீது தீராத பகைமை மேற்கொண்டிருக்கும் சிங்கள அரசியல் கட்சிகள், அக் கட்சிகளின் ஆயுதப் பிரிவாக செயலாற்றும் தீவிரவாதக் குழுக்களின் ஊற்றுக்கண் சிங்களச் சமுதாயத்தில் எங்கு எப்படித் தங்கியிருக்கிறது என்பதைக் காணவும் மற்றும் சமூகக் காரணிகளை ஆராயவும் இந்நூல் துணையாக இருக்கும்.

சிங்கள மக்கள் மத்தியில் பௌத்தமத நிறுவனம் அதிகாரத்தை எவ்வாறு பெறுகிறது எப்படி ஆட்சி செய்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

www.padippakam.com

ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும் மேலான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் பௌத்த மதத்தையும் பௌத்த பிக்குகளையும் அடையாளம் காண்கிறோம்.

தாய்நாட்டுப் பாதுகாப்பு என்பது தமிழ்த்தேசிய இனத்துக்கு எதிராகப் போர்த் தொடுப்பதுதான் என்பதை மீண்டும் மீண்டும் சிங்கள அரசியல் வாதிகள் பௌத்தமத பிக்குகள் நிரூபிக்கிற செயலை அறிய முடிகிறது. புத்தரின் புனித மொழிகளையும் மற்றும் மதச் சடங்குகளையும் இனவெறிப் போக்குகளுக்கு ஆதாரவாகப் புதுப் பொருள் தந்து தமிழர்களுக்கு எதிராக மாற்றுவதையும் ஆதாரங்களோடு இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன.

இந்நூல் முன்னுரையிலும் சரி, நூலின் கருத்திலும் சரி மாறுப்பட்ட கருத்துக்கள் எமக்கே உண்டு என்றாலும் உண்மைகளைக் கண்டறிய பல ஆதாரங்களை நிச்சயம் தருகிறது என்ற திருப்தி ஏற்படுகிறது.

**வைகறை**

பொன்னி
12-6-88.

www.padippakam.com

# முன்னுரை

ஸ்வீடனில் உள்ள உப்சலா பல்கலைக்கழகத்தில் மதங்களின் வரலாறு பற்றிய துறையில் பேராசிரியராகப் பணி புரியும் பீட்டர் சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையை மொழிபெயர்த்து வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். 'Unity' and 'Sovereignty': key concepts of militant Buddhist organisations in the present conflict in Sri Lanka என்ற இக்கட்டுரை சென்றவருடம் மே மாதத்தில் எழுதப்பட்டுள்ளது.

நார்வே நாட்டின் தலைநகரான ஆஸ்லோவிலுள்ள சர்வதேச சமாதான ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் இக் கட்டுரை எழுதப்பட்டு, சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட இனப்பிரச்சினையும், மனித உரிமைகளும், வளர்ச்சியும் என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

இக்கட்டுரையை சல்க் அவர்களிடம் இருந்து சென்ற ஜூலை மாதத்தில் நான் பெற்றேன். அது இந்திய—இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு ஒருசில நாட்களுக்கு முன்புதான் நடந்தது. அப்போது சல்க் அவர்கள் இதே ஆராய்ச்சியின் தொடர்ச்சியாக மீண்டும் தென்னிலங்கைக்குச் செல்ல முயன்றிருந்தார். ஜூலை மாதம் பதினோராம் தேதி சென்னையில் இருந்து கொழும்புக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் சென்ற அவரை, இலங்கை அரசு கொழும்பு விமானதளத்தைவிட்டு வெளியேறவிடவில்லை. சுமார் இரு பதாண்டுகளாகப் பௌத்த மதத்தைப் பற்றியும், ஆசியாவின் இதர மதங்களின் வரலாற்றைப் பற்றியும் விருப்பு—வெறுப்பு எதுவுமின்றி ஆராய்ச்சி செய்தவரும், சிங்கள—பௌத்தத்தின் வரலாற்றைப்பற்றி விசேட ஆராய்ச்சிகளைச் செய்தவரும் சிங்களம், பாலி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்த விற்பன்னருமான சல்க் அவர்கள், இலங்கை அரசால் விரும்பத்தகாதவராகக் கருதப்பட்டார். அன்றிரவே

படிப்பகம்

அதே விமானத்தில் அவர் சென்னைக்குத் திருப்பி அனுப்பப் பட்டார். ஓர் அறிஞர் அவரது ஆராய்ச்சிக்காக நாடு கடத்தப் படுவது, அல்லது விரும்பத்தகாதவராகக் கருதப்படுவது, சிந்தனைச் சுதந்திரத்தையும், அறிவுத்துறையின் வீச்சையும் இலங்கை அரசு மதிக்காதிருக்கும் போக்கையே காட்டுகிறது.

சல்க் அவர்கள் சிங்கள — பௌத்தத்தை ஆராய்ந்த அறிஞர் மட்டுமல்லாமல் இலங்கைவாழ் தமிழர்களின் நலன் களுக்காகவும், உரிமைகளுக்காகவும் குறிப்பாக ஸ்வீடன் நாட் டிலுள்ள தமிழ் அகதிகளின் உரிமைகளுக்காகவும், சர்வதேச அரங்கில் குரல்கொடுக்கத் தயங்காதவர் ஆவார். சுமார் பதினேழு ஆண்டுகளாகச் சிங்கள—பௌத்தத்தை ஆராயும் மாணவராக இருந்துவரும் சல்க் அவர்கள், தம்மை ஒரு மரபான ஆராய்ச்சியாளராகக் கருதிக்கொள்ளாமல், மாறி வரும் காலங்களில் சிங்கள—பௌத்தம் எவ்வாறெல்லாம் ஒரு பேரினவாதக் கருத்தியலாக மாற்றம் அடைந்து இயங்கி வரு கிறது என்பதைக் கண்டறிந்தார். இலங்கைத் தமிழர்கள் இன்றுவரை அனுபவிக்கும் கொடுமைகளுக்கும், துன்பங்களுக் கும் சிங்களப்—பௌத்தப் பேரினவாதமே முக்கிய காரணமாக இருந்துவருகிறது என்பதை உணர்ந்த சல்க் அவர்கள், நெடுங்காலமாக இருந்துவரும் பௌத்த மத சங்கத்தையும் தற்கால சிங்கள—பௌத்த தீவிரவாத இயக்கங்களையும் ஆராயத் தலைப்பட்டார்.

இலங்கை அரசு அமல்படுத்தப் போவதாகச் சொல்லி வரும் மாகாண சபைத் தீர்வையுமே சிங்கள—பௌத்த தீவிர வாத அமைப்புக்கள் ஏன் கடுமையாக எதிர்க்கின்றன என் பதையும், சிங்கள — பௌத்தத்தை அதிகாரப்பூர்வமான மொழி-மதமாகக் கொண்டுள்ள இலங்கை அரசு அமைப்பால் எக்காலத்திலும் இத்தீர்வை நியாயமான முறையில் ஏன் அமல்படுத்த முடியாது என்பதையும் சல்க் அவர்கள் இக் கட்டுரையில் விளக்குகிறார்.

இன்றைய நிலையில், மாகாண சபைத் தீர்வை அமல் படுத்துவதற்காக என்று சொல்லிக்கொண்டு இந்திய— இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டு சுமார் பத்து மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் ஒப்பந்தத்துக்குப்பின்பு இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்திய இராணுவத்தை வைத்துத் தமிழ்ப் போராளிகளை, குறிப்பாக **தமிழீழ விடுதலைப் புலிகளை**, ஒடுக்குவதில் இலங்கை அரசு ஓரளவு வெற்றிகண்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினை களை இலங்கை அரசாலும், இந்திய அரசாலும் உடனடி யாகத் தீர்த்துவைக்க இயலாது என்ற நிலையும் இப்போது ஏற்பட்டுள்ளது. இவ்விரண்டு அரசுகளின் இராணுவச்

செயல்பாடுகளாலும் கடும் துன்பங்களை அனுபவித்துவரும் தமிழர்கள் இனி இவற்றிடமிருந்து அரசியல் களத்தில் நேர்மையை எதிர்பார்த்து இயங்கமுடியுமா என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது. இன்றைய நிலையில் இவ்விரு அரசுகளின் எந்தச் செயல்பாட்டையுமே சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையில்தான் தமிழ்மக்கள் உள்ளனர். நெடுங்காலத்துக்கு இதேநிலை நீடிக்கப்போகிறது என்பதிலும் ஐயமில்லை.

இச்சூழ்நிலையில்தான் சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரை அதிக முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது. தென்னிலங்கையில் இன்று காணப்படும் அரசியல் நெருக்கடிக்குக் காரணம் அரசை வன்மையாக எதிர்க்கும் சிங்களத் தீவிரவாத இளைஞர் அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுன உள்ளிட்ட பல தீவிரவாத அமைப்புக்களா? அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தல்களைப் புறக்கணித்துள்ள பூர்ஷ்வா எதிர்க் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மகாஜன ஏக்சத் பெரமுன ஆகியவையா? அரசு ஒடுக்குமுறை எந்திரத்தால் மட்டுமே தப்பிப்பிழைத்து வரும் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியா? சிங்கள—பௌத்தத்தை அரசு மதமாக ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை அரசு அமைப்பா? என்ற கேள்விக்கான பதில் இக்கட்டுரையில் பல இடங்களில் காணப்படுகிறது என்று கூறலாம். நெருக்கடிக்குக் காரணமாக எந்த ஓர் அமைப்பையுமே தனியே குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்ற நிலை இன்று உள்ளது.

அதாவது 'ஒற்றுமை', 'இறையாண்மை' என்று இவ்வனைத்து அமைப்புகளாலும் முன்வைக்கப்படும் கருத்தாக்கங்கள், ''சிங்களவர்களுக்கான அமைதியை'' சிங்கள—பௌத்த மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளும் நாட்டின் ஒற்றுமையைக் குறிக்கின்றன. இது எப்படிச் செயலூக்கம் பெற்றுள்ளது என்பதை சல்க் அவர்களின் கட்டுரை விளக்குகிறது.

மேலும் சென்ற ஆண்டு மேதினம் அன்று கொழும்பு நகரில் நடந்த கலவரத்தையும், துப்பாக்கிச் சூட்டையும் பற்றியசெய்திக்கட்டுரை இந்நூலின் பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளது. இதிலிருந்து தென்னிலங்கை அரசியலில் உள்ள நெருக்கடியின் பல பரிமாணங்கள் தெளிவாகின்றன. சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையின் முடிவுரையில் கூறப்பட்டுள்ளவற்றை இங்கு ஒருமுறை குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்:

''தமிழ்ப் போராளிகளின் எதிர்ப்பை முறியடிக்காத வரையில் ''மண்ணின் மைந்தர்கள்'' இலங்கை இராணுவத்தின் ஒரு பகுதியினரோடு சேர்ந்துகொண்டு அதிரடிக்

கிளர்ச்சி ஒன்றை நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய அபாயத்தை ஜெயவர்த்தன அரசு எதிர்கொண்டுதான் இருக்கும். இந்த அபாயத்தைத் தணிக்கவேண்டுமானால் ஜெயவர்த்தன அரசு இராணுவ ஆக்கிரமிப்பு ஒன்றின்மூலம் நாட்டை ஒன்றுபடுத்தி ''சிங்களவர்களுக்கான அமைதியை'' ஏற்படுத்த ஒரு வேலைத்திட்டத்தை உடனடியாக முன்வைக்க வேண்டியிருக்கும்."

இந்திய—இலங்கை ஒப்பந்தம் அப்படிப்பட்ட ஒரு வேலைத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறது என்பதில் உள்ள உண்மையை யாரும் மறுக்க இயலாது. அதே சமயத்தில் இதே உண்மையின் மறுபக்கமாக, இவ்வேலைத் திட்டத்தின் மூலமாக தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடியை இலங்கை அரசால் சமாளிக்க முடியுமா என்ற கேள்வி இன்னும் உள்ளது. இதையே திருப்பிச் சொல்வதானால் தென்னிலங்கையின் சமூகத்திலும் அரசியலிலும் ஆதிக்கம் பெற்றுள்ள சக்திகள் இப்பிரச்சினையைப் பயன்படுத்தி எந்த அளவிற்குத் தமது ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளப்போகின்றன என்பது இன்னும் தெளிவாகவில்லை.

ஏற்கனவே ஆதிக்கம் பெற்றுவந்துள்ள இச்சக்திகள் தம்மைப் பல்வேறு குழுக்களாகப் பிரித்துக்கொண்டு, மிதவாத எதிர்க்கட்சிகள் என்ற நிலையிலிருந்து தீவிரவாத அமைப்புக்கள் வரையிலும் பிரிந்துநிற்கின்றன. இதுவே சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையின் முக்கியக் கண்டு பிடிப்பாகும்.

இவற்றில் எந்தக்கட்சி பதவியில் இருந்தாலுமே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மாகாண சபைத் தீர்வை நியாயமான முறையில் அமுல்படுத்தப் போவதில்லை. அமல்படுத்தப்படும் ''தீர்வானது'' எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதும் வடக்கு—கிழக்கில் நிலைகொண்டுள்ள இந்திய இராணுவத்துக்கும் தென்னிலங்கையில் அதிகாரம் செலுத்திவரும் சக்திகளுக்குள்ளும் தோன்றும் முரண்பாடுகள் எப்படியெல்லாம் மாற்றம் பெறக்கூடும் என்பதைப்பொறுத்தே உள்ளது.

இதைக் கூறும்போது மற்ற முரண்பாடுகளை நாம் காணத் தவறிவிட்டதாக நீங்கள் நினைக்கக் கூடாது. ஒரு விதத்தில் பார்த்தால் இலங்கையில் முரண்பாடற்ற இரு சக்திகள் என்று ஒன்று எதுவுமே இல்லை என்பதுதான உண்மை! அதே நேரத்தில் இந்த முரண்பாடுகள் எவ்வகையிலானவை என்பதும், இந்த முரண்பாடுகள் தீர்க்கப்படுவதன் மூலம் தமிழ்-சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வும், இனப்பிரச்சினைக்கான தீர்வும் சாத்திய

www.padippakam.com

மாகுமா என்பதும் நம்முன் எழுந்துநிற்கும் பிரம்மாண்டமான கேள்விகளாகும்.

இக்கேள்விகளுக்கான பதிலை சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையின் இறுதியில் காணப்படும் விவாதத்தில் இருந்து ஓரளவு பெறலாம் என்று நினைக்கிறேன். அந்தஸ்து (status), அதிகாரம் (power) ஆகியவற்றுக்குள்ள உறவு பற்றி அவர் விவரிக்கும்போது, பொதுவாக ஆசிய சமுதாயங்களில் இவற்றில் ஒன்றிலிருந்து மற்றொன்று பெறப்படுவதில்லை என்று குறிப்பிடுகிறார். அதாவது இவற்றுக்கு உள்ளிருக்கும் உறவு நேரடியானது அல்ல; மாறாக ஒரு தராசின் இரு தட்டுக்கள் ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவைப் போலவே அதிகாரமும் அந்தஸ்தும் உறவு கொண்டுள்ளன. ஒன்று மேலே ஏறும்போது மற்றது கீழே இறங்குகிறது! சொத்துக்கள், அரசு அதிகாரம் போன்றவற்றைக் களைந்து துறவுநிலையினை அடையும் பௌத்த பிக்கு ஒருவர், சொத்துக்களைக் களையாமல் சமூக அந்தஸ்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைவிட ஒழுக்கம் அடைந்தவராகக் கருதப்படுகிறார். இதனாலேயே அவரிடம் அறரீதியான அதிகாரம் சென்றடையும் நிலை ஏற்படுகிறது.

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த இடதுசாரிச் சிந்தனையாளராகக் கருதப்படும் மிஷேல் ஃபூக்கல் (1927—1984) என்ற பிரஞ்சுத் தத்துவவாதியின் அதிகாரம் பற்றிய சிந்தனைகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரத்தின் நுண் பௌதிகம் (Microphysics of Power, 1977)என்ற புத்தகத்தில் அதிகாரம்பற்றிய பல கோட்பாடுகளை வேறுபடுத்திக் காட்டுகிறார்.

அவையாவன :—

1. தாராளவாதத்திலும் (liberalism), மார்க்சியத்திலும் கூறப்பட்டுள்ள அதிகாரம் பற்றிய கோட்பாடு:

இது அதிகாரம் பற்றிய பொருளாதாரவாதக் கோட்பாடாகும். இக்கோட்பாடு அதிகாரத்தை சரக்கைப்போல பார்க்கிறது, இதன்படி அதிகாரத்தை நீங்கள் கைப்பற்றலாம். அல்லது ஒரு சரக்குப் பொருளை நீங்கள் அடைய முடியாது போவதுபோல உங்கள் கைகளுக்கு அதிகாரம் எட்டாமலும போகலாம்.

சட்டரீதியான பண்டமாற்றைப் போலானதே அதிகாரம் என்று மெல்லியல் வாதமும், உற்பத்திச் சக்திகளையும், உற்பத்திக் கருவிகளையும், கைப்பற்றி வைத்திருக்கும் வர்க்க

படிப்பகம்

ஆதிக்கமே அதிகாரம் என்று மார்க்சியமும் தத்தம் கோட்பாடுகளை வேறுபடுத்திக் காட்டுகின்றன,

2. அடுத்ததாக அதிகாரம் பற்றிய ஒடுக்குமுறைக் கோட்பாட்டைக் (repressive hypothesis of power) காண்போம் :

''அதிகாரம் என்பது சொத்துரிமை போன்ற பொருளாதார அடிப்படைகளில் அடங்கிவிடுவதல்ல" என்று இக்கோட்பாடு கூறுகிறது. ''வேறெதையும்விட, அதிகாரம் என்பது ஒரு சமூகத்தில் ஆதிக்கம் அமைத்துள்ள உறவுமுறைகளைப் பற்றியதாகும் (Power is above all a relation of force)" என்று இக்கோட்பாடு கூறுகிறது.

ஹெகல், ப்ராய்டு ஆகிய அறிஞர்களாலும் மார்க்சியத்தாலும் ஓரளவு இக்கோட்பாடானது ஏற்றுக்கொள்ளப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

3. இவ்விரு கோட்பாடுகளுமே அதிகாரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு விளக்கவில்லை என்று ஃபாக்கல் குறைப்பட்டுக்கொள்கிறார்:

''அதிகாரம் என்பது உண்மையில் என்ன? அது ஒரு போர்; போர் என்றால் நேரடியான போர்முறைகளைக் களைந்துவிட்ட போர்; இன்னும் சொல்லப்போனால் குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் நடக்கும் மௌனமான, இரகசியமான போர்; பல்வேறு சமூக நிறுவனங்களிலும், பொருளாதார சமத்துவமின்மையிலும், மொழியிலும், நம் ஒவ்வொருவரின் உடல்களிலுமே முரண்பாடுகளைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கும் போர்."

இவ்வாறெல்லாம் அதிகாரம் பற்றிய கோட்பாடுகளை வேறுபடுத்திக் காட்டும் ஃபாக்கல், அதிகாரம் பற்றிய ஒடுக்குமுறைக் கோட்பாடும், போர்க் கோட்பாடும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையே என்று கூறுகிறார். இவை எப்படித் தொடர்பு கொண்டவை என்றால்-ஒடுக்குமுறை என்பது அதிகாரத்தின் மூலமாக (Source) இருப்பதில்லை. மாறாக அதிகாரத்தின் துணை விளைவே (Subordinate effect) ஒடுக்குமுறையாகும். அதாவது, அதிகாரம் என்பது முதலில் உற்பத்தியைச் சாத்தியமாக்குகிறது; அதுவே ஒடுக்குமுறைக்கும் காரணமாக இருக்கிறது; ஆனால் ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதற்குமுன்பு உற்பத்தியிலேயே குறியாக இருக்கிறது. எனெனில் எந்த ஒரு சமூகத்திலும் அதிகாரத்தால் ஒடுக்கப்பெறும் மனிதர்களும்கூட அதிகாரத்தால் உற்பத்தி செய்யப்பட்டவர்களே!

ஃபாக்கலின் ஆராய்ச்சிகள் மேலைநாடுகளின் சமுதாய நிறுவனங்களில் அதிகாரம் செலுத்தப்படும் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை வரலாற்று ரீதியாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளன. மனநோய் விடுதிகள், சிறைக்கூடங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், இராணுவ முகாம்கள், குடும்பம் மற்றும் படுக்கையறை ஆகிய பல சமுதாய நிறுவனங்களில் அதிகாரம் செலுத்தப்படும் முறைகளில் கடந்த நான்கு நூற்றாண்டுகளாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள்பற்றி ஃபாக்கல் தனித்தனியாக நூல்கள் எழுதியுள்ளார்.

இப்படிப்பட்ட ஓர் ஆய்வின்மூலமே தென்னிலங்கையில் உள்ள சமுதாய நிறுவனங்களாகிய பௌத்த மத சங்கம், பூர்ஷ்வா கட்சிகள், இராணுவம், தீவிரவாத அமைப்புகள் ஆகியவை செலுத்திவரும் அதிகாரங்கள் எப்படிப்பட்டவை என்பதற்கான பதிலைக் காணமுடியும்; சிங்கள—பௌத்த பேரினவாதம் தலைதூக்கியுள்ள இக்காலக் கட்டத்தில் இந் நிறுவனங்கள் செலுத்திவரும் அதிகாரங்கள் குறைந் துள்ளனவா அல்லது கூடியுள்ளனவா என்ற கேள்விக்கான பதிலையும் கூற முடியும். இவ்வாராய்ச்சிக்கான கூறுகளை சல்க் அவர்களின் கட்டுரையில் காணலாம். குறிப்பாக, பௌத்த மத சங்கம் எப்படியெல்லாம் அதிகாரத்தைச் செலுத்துகிறது, அது அதிகாரத்தைச் செலுத்திவரும் முறைகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் யாவை ஆகிய கேள்விகளுக்கான பதில்கள் சல்க் அவர்களின் ஆராய்ச்சியில் உள்ளன. ஆதிகாலத்தில் ஒரு பௌத்த பிக்கு துறவுநிலை மூலம் அறரீதியான அதிகாரத்தை அடைந்தார் என்பது உண்மைதான் எனினும், இன்றைய சூழ்நிலையில் அந்தஸ்துக்கான விழைவும் ஒன்றொடொன்று சார்ந்துவிடும் போக்கை இலங்கையில் காண முடிகிறது என்று சல்க் கண்டறிந்துள்ளார்.

இக்கட்டுரையைப் படிப்பதற்கு இலங்கையின் முக்கிய சமூகவியலாளர்கள் பலரின் கட்டுரைகளின் தொகுப்பான இலங்கையில் இனத்துவமும் மாற்றமும் (தமிழ்ப்பதிப்பு யாழ்ப்பாணம் 1985) என்ற நூலும் குமாரி ஜெயவர்த்தன அவர்களது இலங்கையின், இன, வர்க்க முரண்பாடுகள் என்ற நூலும் துணை புரியக்கூடும்,

இலங்கையின் இன்றைய குழப்பமான நிலைமைகளில் தமிழ், சிங்கள மக்களின் பிரச்சினைகளில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் சல்க் அவர்களின் இக்கட்டுரையை

www.padippakam.com

ஆழ்ந்து படிக்க வேண்டும், தமிழ்ப் போராளிகளை அடக்கு வதற்கு அந்நியச் சக்தியான இந்திய இராணுவத்தை பயன் படுத்துவதை ஓரளவிற்கு ஊகித்துவிட்ட இக்கட்டுரை, வருங் காலத்திலும் நடக்கக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளை எதிர் கொள்ளத் தயாராக விரும்புபவர்களுக்கு இந்நிகழ்ச்சிகள் பற்றிய பல சாத்தியக் கூறுகளைக் குறிப்பிட்டுக் காட்டு கிறது.

சென்னை
மே 1988

நாகார்ஜுனன்

படிப்பகம்

www.padippakam.com

# பௌத்த சிங்கள இனவெறி தீவிரவாதம்

1986 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் கட்டியெழுப்பப் பட்ட சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புக்களில் ஒன்றான தாய்நாட்டுப் பாதுகாப்புப்படை (மவபீம சுரகீம வியாபாரய Campaign for the Protection of Motherland) என்ற அமைப்பை இங்கு ஆராய்வோம்.

முன்னாள் பிரதமரான திருமதி சிறிமாவோ பண்டார நாயாகவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி (Sri Lanka Freedom Party) மற்றும் தினேஷ் குணவர்த்தனாவின் மகாஜன ஏக்சத் பெரமுன ஆகிய நாடாளுமன்றக் கட்சிகளுடன் இவ்வமைப்பு நெருங்கிய உறவு கொண்டுள்ளது. செல்வாக்குடன் விளங் கும் பிரபல பௌத்த பிக்குகளான மதுலோவாவெ சோபித தேரோ மற்றும் விலகோட ஆரியதேவ ஆகியோரும் இவ் வமைப்பில் உள்ளனர். மேலும் பௌத்த தேசியவாத இடது சாரி அமைப்புக்களுடனும், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி) அமைப்புடனும் இது தொடர்பு கொண்டுள்ளது.

இவ்வகையான அமைப்புக்களின் தத்துவார்த்த அடிப் படைகள் பின்வருமாறு :

## "ஒற்றுமை" (ஏகியபாவய), "இறையாண்மை" (ஸ்வைரிபாவய)

இவ்வடிப்படைகள் தற்போதைய இலங்கை அரசானது இனப்பிரச்சனைக்கு அதிகபட்சத் தீர்வாக வைத் திருக்கும் மாகாண சபைத் தீர்வையும், தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஈழப்போராளிகளின் கோரிக்கைகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத் தையும், ஈழத்தையும் கடுமையாக எதிர்ப்பனவாகும். எனவே, அரசு—அதிகாரம் எவ்விதத்திலும் பகிர்ந்தளிக்கப்படுவதை இவ்வமைப்புக்கள் எதிர்க்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கைத் தீவில் அமைதியை நிலை நாட்டுவதற்காக ஜெயவர்த்தன அரசு முன்வைத்துள்ள மாகாணசபைத் தீர்வை எதிர்க்கும் தாய்நாட்டுப் பாதுகாப்புப் படை (தா. பா. ப) அமைப்பு, தானுமே அமைதியைத் தோற்றுவிக்கப் பாடுபடுவதாகக் கூறுகிறது. இந்த அமைதியானது இவ்வமைப்பின் "ஒற்றுமை", "இறையாண்மை" ஆகிய கருத்தாக்க அடிப்படைகளின் மேல் கட்டப்பட்டதாகும்.

தாய்நாட்டுப் பாதுகாப்புப்படை அமைப்பை ஆராயும்போது, இலங்கை பௌத்த மதகுருக்களின் சங்கமானது இலங்கையின் அரசியல் கட்சிகளை எவ்வாறு ஆட்டுவிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தா. பா. ப. போன்ற இடைநிலை அமைப்புகள் மூலமாகவே இது சாத்தியப்படுகிறது. இதனால் புத்த பெருமானின் "அறிவுரைகள்" அரசியல் செயற்பாடுகளாக மாற்றப்பட்டுக் கடைபிடிக்கப்படுவதும் சாத்தியமாகிறது.

1979-ம் ஆண்டுக்குப்பிறகே புதிய சிங்கள பௌத்தத் தீவிரவாத அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. "மண்ணின் மைந்தர்" (பூமிபுத்ர) என்ற கோஷத்தை முன் வைத்து, சிங்கள தமிழ் மக்களிடையே இருந்த இனரீதியான பிளவை நிரந்தரமானதாக இவை மாற்றிவிட்டன.

இவ்வமைப்புக்களின் கருத்தியலானது, மரபு வழியான பௌத்த இலக்கியங்களில் தமிழர்களைப்பற்றிக் கூறப்பட்டு வந்தவற்றையும், சென்ற நூற்றாண்டின் இறுதியில் அநகாரிக தர்மபால மேற்கொண்ட இனவாதப் பிரச்சாரத்தையும் அடிப்படைகளாகக் கொண்டுள்ளது. பௌத்த நூல்களான மகாவம்ச, மகாவம்சய சிங்கள, விரிவாக்கப்பட்ட மகாவம்ச, வம்சத்த பகாசினி, பூஜாவலிய, சதர்ம வங்காலய, தூபவம்சய, ராஜவலிய ஆகிய பலபுத்தகங்களில் இக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றின்படி துட்டகைமுனு தமிழர்களைக் கொன்று குவிக்க நேர்ந்ததைப் பற்றிக் குற்ற உணர்வுடன் பேசும்போது அவனுக்குச் சொல்லப்பட்டது, "தமிழர்கள் மனிதர்களல்லர்; எனவே அவர்களைக் கொல்வதில் தவறில்லை" என்பதாகும். எனவே இக்கருத்தியல் ஒரே சமயத்தில் பழமையானதும், நவீனமானதும் ஆக விளங்குகின்றது.

இவ்வமைப்புக்களிடையே ஒற்றுமையின்றி பல முரண்பாடுகளே உள்ளன. பிற பௌத்த சமய இயக்கங்கள் இவற்றுடன் கருத்து மோதலைத் தொடுத்து வருகின்றன. இதனால் முழுமையான பௌத்த முன்னணி என ஒன்று எற்



படிப்பகம்

www.padippakam.com

படாமல் போய்விடலாம். மேலும், இவ்வமைப்புகள் அனைத்துமே ஏதோ ஓர் அரசியல்கட்சியுடன் நேரடித் தொடர்பு வைத்துள்ளன. தமிழர் உரிமைகள் குறித்த இக் கட்சிகளின் கொள்கைகளை விவாதிப்பதில் இவ்வமைப்புக் கள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன.

பழைய பௌத்த அமைப்புகளில், அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் (All Ceylon Buddhist Congress) மற்றும் உலக பௌத்தர் கழகம் (World Fellowship of Buddhists) ஆகியவை மட்டுமே தீவிரவாத நோக்குள்ளவை.

1986 ஆம் ஆண்டு நேபாளத்தின் தலைநகரான காட்மண்டுவில் நடந்த இக்கழகத்தின் பதினைந்தாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின் வருமாறு:

''சுமார் 70 சதவிகித மக்கள் பௌத்தர்களாக இருக்கும் இலங்கை என்னும் அருமையான நாட்டில் ஒரு பயங்கர வாத இயக்கம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. இந்த இயக்கமானது இனவாத இயக்கமாகும். அந்நிய நாடு களால் தூண்டப்பட்டு வரும் இந்த இயக்கம், பௌத்த தர்மத்தையும் பௌத்த கலாச்சாரத்தையும், பௌத்த வாழ்க்கை நெறிமுறைகளையும் அழித்தொழிக்க வேண்டும் என்ற சர்வதேசிய இலட்சியத்தினைக் கொண்டு பிரிவினை வாத முழக்கத்தின்கீழ் அந்த லட்சியத்தை மறைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறது".

இத்தீர்மானம் மிகச் சுலபமாக சர்வதேச பௌத்த இயக் கங்களின் ஆதரவைப் பெற்று நிறைவேறியதை இங்கு குறிப்பிட வேண்டும். தற்போது தீவிரநோக்கு கொண்டு இயங்கும் அமைப்புகள் அனைத்துமே 1979 க்குப் பிறகே அமைக்கப்பட்டவை. அவையாவன:

### 1. சிறிலங்கா பௌத்த சமய நியோஜித சபாவ:

இது 1979-ல் அமைக்கப்பட்டது. ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் (யு. என். பி) உள்ள சேன-நாயக்க கோஷ்டிக்குச் சொந்தமானது; எனவே ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கோஷ்டிக்கு எதிரானது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பிற பூர்ஷ்வா எதிர்கட்சிகளின் ஆதரவுள்ள பௌத்த தீவிரவாத அமைப்புகளுடன் அவ்வப் போது சேர்ந்துகொண்டு அரசியல் செயற்பாடுகளை இது மேற்கொள்ளும்.



படிப்பகம்

2. சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சம்விதானய:

இது 1982-ல் அமைக்கப்பட்டது; ஜனாதிபதி ஜெயவர்த்தன கோஷ்டியின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்கு கிறது.

3. சிங்கள பல மண்டலய:

1982-ல் அமைக்கப்பெற்றது. பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. இவ்வமைப்பின் தலைவர் மதுலோவாவெ சோபிததேரோ மிகுந்த செல்வாக்குள்ள சில புத்தபிக்கு களில் ஒருவர். சிங்களக் கிராமங்களில் பரவலாக இயங்கி வரும் குடிப்பழக்க ஒழிப்பு இயக்கத்தினூடே தமது கருத்துக் களைப் பரப்பி வருபவர்.

4. ஜாதிக பெரமுன:

ஆகஸ்டு 1985-ல் கட்டப்பெற்றது. அனைத்துப் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளையும் அஸ்கிரிய பௌத்த மடால யத்தின் மகாநாயகரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்கிறது. (இதற்கு முன்பு இதே மகாநாயகர் சிறிலங்கா பௌத்த சம்மேளனய என்ற அமைப்பை 1985 ஏப்ரலில் துவக்கி வைத்தார்.)

5. மானவ இதவாதி பிக்கு சம்விதானய:

1984-ல் பௌத்த பிக்குகளுக்காகவென்று அமைக்கப் பட்ட இயக்கம். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி) இயக்கத்தாருடன் தொடர்பு கொண்டுள்ளது.

6. மவபீம சுரகீம வியாபாரய: (தாய்நாட்டுப் பாதுகாப்புப் படை)

1986 ஜூலை மாதம் அரசின் மாகாண சபைத் தீர்வு களை எதிர்ப்பதற்கென்றே அமைக்கப்பட்டது; பூர்ஷ்வாபு கட்சிகளுடன் நெருங்கிய உறவு கொண்டது.

இன்னும் பல அமைப்புகள் இருப்பினும், இவையே பிரதானமானவை. பௌத்த சங்கத்துக்கும் இவ்வமைப்புக் களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் உள்ள உறவுகளைப் பற்றிப் பின்பு விரிவாகக் காண்போம்.

இவ்வனைத்து அமைப்புகளுமே இனப்பிரச்சினையையும், தமிழர் உரிமைகளையும் அடிப்படையாக வைத்தே கட்டப் பட்டுள்ளன.

www.padippakam.com

இவற்றில் சிறிலங்கா பௌத்த சமய நியோஜித சபாவ அமைப்பு பௌத்த சமயம் பற்றிய அனைத்து விவாதங் களைமட்டுமே நடத்தி வருகின்றது எனினும், நாட்டின் இனப் பிரச்சினையே இது விவாதித்து வரும் முக்கிய பிரச்சினை ஆகும்.

சம்விதானய மற்றும் தா. பா. ப. அமைப்புகள் ஒரே காலத்தில் துவங்கப் பெற்றவை. சம்விதானய அரசே கட்டி யெழுப்பிய அமைப்பு; தா. பா. ப. அமைப்பு பூர்ஷ்வா எதிர்க் கட்சிகள் கட்டி அமைத்ததாகும்.

ஜாதிக பெரமுன என்ற அமைப்பு அனைத்துப் பௌத்தத் தீவிரவாத அமைப்புகளையும் ஒரு குடையின்கீழ் கொண்டுவர முற்படுகிறது.

ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தொடர்புள்ள மானவ இதவாதி பிக்கு சம்விதானய அமைப்பானது, பௌத்தபிக்கு களைத் தீவிரவாதிகளாக மாற்றுவதற்காக, ஜே. வி. பி. இயக்கத்தின் பிரச்சாரத்தை நேரடியாக மேற்கொள்கிறது. தா. பா. ப. அமைப்பும் பல அமைப்புகளை ஒரே அணியில் கொண்டுவந்து தமிழர் எதிர்ப்பு அணியைக் கட்ட முற் பட்டுள்ளது.

நாம் இங்கு தா. பா. ப. அமைப்பை மட்டும் கடும் ஆய்வுக்கு உட்படுத்த விழைகிறோம். இதன்மூலம் மதச் சார்ப்பற்றதைப் போல் இயங்கி வரும் சிங்கள அரசியல் கட்சிகளை பௌத்த குருமார்கள் எவ்வாறு ஆட்டிப் படைக் கிறார்கள் என்பதை அறியமுடியும்.

இவ்வாறாக ஆட்டிப்படைக்கப்பட்ட சிங்கள மக்களோ, மாகாணசபைத்தீர்வைக் கூட எதிர்ப்பதில் மும்முரம் காட்டு கிறார்கள். இலங்கையின் ‘‘ஒற்றுமை’’ மற்றும் ‘‘இறையாண்மை’’ ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்காகத் தான் இத்தீர்வையும் எதிர்த்திட வேண்டும் என்று அவர் களுக்குப் போதிக்கப்பட்டதன் பலனே இது!

## தாய் நாட்டுப் பாதுகாப்புப் படை:

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசு மாகாணசபைத் தீர்வை முன்வைத்த சமயத்தில் நான் இவ் வமைப்பைப் பற்றிய ஆய்வைச் செய்தேன். இவ்வமைப்பின் தலைவர்கள் எழுதிய மூன்று அறிக்கைப் பிரசுரங்களையும் அவர்களுடன் நடத்திய மூன்று நேர்காணல்களையும் இதில் பயன்படுத்தியுள்ளேன். இவையே இவ்வமைப்பைப் புரிந்து



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளப் போதும் என்றாகி விடாது. இவ்வமைப்பானது பரந்துபட்ட மக்களைத் தன்னளவில் ஈர்த்து வருகின்றது என்பதையும், இதன் கோஷங்கள் எளிமையாகவும் வெகு விரைவில் விலைபோகக் கூடியவையாக இருப்பதையும் நாம் காணவேண்டும்.

1986 ஆகஸ்டு—செப்டம்பர் மாதங்களில் தினசரி ஒரு கூட்டம் என்றளவில் 16 பெரும் பொதுக்கூட்டங்கள் இவ் வியக்கத்தாரால் நடத்தப் பெற்றன. இவை நடந்த இடங் கள் நுகேகுட, வட்டுவ, அம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய, வெல்லாவய, பதுளை, ஓரணை, மாத்தளை, நாத்தாண்டிய, குருநாகல், கொழும்பு, துவலப்பிட்டிய, உரகக, காலி, தங்காலை மற்றும் கண்டி.

நவம்பர் மாதத்துக்குள் 30 பொதுக் கூட்டங்கள் நடத்தப் பெற்று விட்டன. இக்கூட்டங்களே தா. பா. ப. அமைப்பின் போர்க்குணங்களை வளர்த்தெடுக்கப் பயன்படுகின்றன. பெரும் விளம்பரங்களுடன் இக்கூட்டங்கள் விளங்குகின்றன. இவ்வியக்கத்தின் குறிக்கோள்களை வெளிப்படுத்தும் அறிக் கைகளைக் கவனிப்போம்.

இலங்கை அரசு இனப்பிரச்சினையை ஒட்டி நடத்தி வந்த கொழும்பு அனைத்துக் கட்சி மாநாடு (டிசம்பர் 1984) போராளிக் குழுக்களுடன் நடத்திய திம்பு பேச்சு வார்த்தை கள் (ஜூன்—ஆகஸ்டு 1985), மீண்டும் தமிழர் ஐக்கிய விடு தலைக் கூட்டணியுடன் (TULF) நடத்திய கொழும்புப் பேச்சுவார்த்தைகள் (மே—டிசம்பர் 1986) ஆகியவற்றை அடுத்து மாகாணசபைத் தீர்வை தானாகவே அமல் படுத்தத் தீர்மானித்தது.

இதையொட்டி 1986 நவம்பர் மாதம் இந்தியாவில் பெங்களூரில் நடந்த சார்க் (SAARC) உச்சி மாநாட்டின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரன் அங்கு இந்திய அரசால் கொண்டு செல்லப்பட்டார். இதன்பின்பு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தியது. மாகாண சபைத் தீர்வை கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா மகாஜனக் கட்சி (SLMP), லங்கா சமசமாஜக்கட்சி (LSSP) ஆகியவை வெளிப் படையாக வரவேற்றன.

(இக்கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் இல்லை என்பதை நினைவு கொள்வோம்.) மேலும்,



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் இயங்கிவரும் சமூக, மத ஆராய்ச்சி மையம் (Centre for Society and Religion) மற்றும் அறிவு வளர்ச்சிக் குழு (Committee for Rational Development) ஆகிய அறிஞர் குழுக்களும் இத்தீர்வை ஆதரித்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன ஏக்சத் பெரமுன (MEP), நவசம சமாஜக் கட்சி (NSSP) மற்றும் ஜே. வி. பி. ஆகியவை இத்தீர்வை வெளிப்படையாகவே எதிர்த்தன. தா. பா. ப. அமைப்பும் இத்தீர்வை எதிர்த்தது. இதைத் தொடர்ந்து நிகயத் தலைவர்கள் அனைவரும் தீர்வை எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்டனர்.

பௌத்தமத சங்கமானது, நிகயங்களைத் தவிர்த்து, பிரதேசவாரியாகவும் அமைக்கப்பட்டுள்ளதாகும். இலங்கையின் தென்பிரதேசமாகிய உறுகுணை (Ruhuna) யிலிருந்து சங்க உறுப்பினர்கள் மாகாணசபை தீர்வுக்குக் கண்டனம் தெரிவித்தனர். மற்றைய பிரதேசத்திலுள்ள சங்க உறுப்பினர்களும் மாகாணசபைத் தீர்வை எதிர்ப்பார்கள் என்றே தெரிகிறது.

இதைத்தவிர அஸ்கிரிய பௌத்த மடாலயத்தின் மகாநாயகரும், அமரபுர நிகயத்தின் மகாநாயகரும் பத்திரிகைகளுக்கு அளித்த அறிக்கைகளையும் நாம் இங்கு காண வேண்டும்.

தா. பா. ப. அமைப்பு நிகயங்கள் விடுத்துள்ள நீண்ட அறிக்கைகளின் தொகுப்பைப் பரவலாக மக்களிடையே எடுத்துச் செல்கிறது. ஆனால் பௌத்த மத சங்கமோ தான் நேரடியாக எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் தொடர்பு வைத்திருப்பதை அவமானமாகக் கருதுகிறது. சங்கத்தின் அந்தஸ்தே தன்னை அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக் காட்டிக்கொள்வதில்தான் அடங்கியுள்ளது. (சிங்கள—பௌத்தம் 1972 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் அரசியல் சட்டத்தில் விசேட அந்தஸ்து பெற்றிருப்பது தெரிந்ததே). எனவே பௌத்தமத சங்கம், நேரடியாக அல்லாது தா. பா. ப. வைப் போன்ற அமைப்புகளினூடாக தனது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதும் சாத்தியமாகிறது!

## தா. பா. ப. வின் முதல் அறிக்கை

இவ்வறிக்கை அமைப்பைப்பற்றிய முன்னுரையையும், அதனைச்சார்ந்த 21 பிற அமைப்புக்களின் பெயர்களையும் கொண்டுள்ளது. 1986 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் இது எழுதப் பெற்றிருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இதன் மொழிப்பெயர்ப்பு பின்வருமாறு:

''இலங்கைத்தீவு சிங்களவர், தமிழர், முஸ்லிம்களது நாடாகும். கடந்த ஆயிரம் வருடங்களாக நாம் இவ்வாறே வாழ்ந்து வந்துள்ளோம். வருங்காலத்திலும் இவ்வமைதியான நிலைமை தொடர்வதையே நாம் விரும்புகிறோம். ஆனால் இன்றோ, தேசிய சர்வதேசிய அளவில் நமது தாய்நாட்டைப் பிரித்தெடுப்பதற்கான சூழ்ச்சியொன்று நடந்து வருகிறது.

இனரீதியான மாகாணசபைத்தீர்வு, நாட்டை இரண்டாகத் துண்டாடுவதற்கான அடிப்படையைப் போட்டு விட்டுப் பின்பு நாட்டை முழுமையாக அழிக்கும் திட்டமாகும்.

கொலைகார ஈழ வாதத்தைத் தோற்கடிப்பதன்மூலம் நமது நாட்டைப் பிளக்க வழி வகுக்கும் தேசிய, சர்வதேசியச் சதியை முறியடிப்போம்! நமது குறிக்கோளானது அனைத்து இனங்களும் நட்புடனும், அமைதியாகவும், புரிந்துணர்வுடனும் வாழவேண்டும் என்பதே! ஏனெனில் நமது நாட்டின் சொத்துக்களும், மூல வளங்களும் சமமாகப் பங்கிடப்பெற்று உள்ளன''.

இவ்வறிக்கையானது தா. பா. ப. அமைப்பு எடுத்துள்ள இரண்டு அடிப்படை நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகிறது. முதலாவதாக, மூல வளங்கள் சமமாகப்பகிர்ந்து கொள்ளப் பட்டுள்ளன. அடுத்ததாக நாட்டைப்பிளக்கும் சதிகாரர்கள் யாரென்று கூறப்படவில்லை. அவை தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, கத்தோலிக்கச் செயற்பாட்டுக் குழுக்கள் மற்றும் இந்திய அரசு ஆகியவையாகும்.

இவ்வறிக்கை நமக்குத் தெளிவுப்படுத்துவது என்ன? தமிழர்களுக்கும், சிங்களர்களுக்கும் தமிழர் பிரச்சினை பற்றி எந்தவொரு கருத்துப்பரிமாற்றமும் ஏற்படவில்லை என்பதே அது! மூலவளங்கள் சமமாகப் பங்கிடப்பட்டு இருப்பதாகக் கூறும் இவ்வறிக்கையானது, தமிழர்களது தேவைகள், கோரிக்கைகள் மற்றும் விவாதங்களில் இருந்து எவ்வளவு தூரம் அந்நியப்பட்டுப் போயுள்ளது என்பதைக் காணமுடிகிறது. இப்படிப்பட்ட ஓர் அறிக்கை எழுதப்பெற்றிருப்பது இலங்கையில் இன்று நிலவும் அமைதியின்மை, போர் ஆகியவற்றின் துரதிருஷ்டமான துயரவிளைவு என்றே கூறிவிடலாம்.

இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய கருத்தாக்கங்களான ''கொலைகார ஈழ வாதம்'', ''தேசிய-சர்வதேசிய சதி'' ஆகியவை இதன் தீவிரவாதத்தை



படிப்பகம்

வெளிப்படுத்துகின்றன. அதே சமயம், இதனை விமரிசிப்பவர்களை இனவாதிகள் என்று அடையாளங்காட்டவும் செய்கிறது. இவ்வாறு தமது மீது வைக்கப்படும் குற்றச்சாட்டை, சாட்டுபவர் மீதே திருப்புவது தற்கால "மண்ணின் மைந்தர்" கோட்பாட்டாளர்களின் கைதேர்ந்த யுக்தியாகும்.

உறுகுணை பகுதியில் பௌத்தமத சங்கமானது வெளியிட்ட அறிக்கையில் இதே வாசகங்கள் உள்ளன. எனவே தா. பா. ப. அமைப்பினருக்கும், சங்கத்துக்கும் இடையே உள்ள இணக்கமான உறவுகள் தெளிவாகின்றன.

கீழ்க்கண்ட 21 அமைப்புகள் தா. பா. ப. அமைப்பினுள் பங்குடையனவாகும்.

1. சிறிலங்கா நிடஹராச பக்சய
2. மகாஜன ஏக்சத் பெரமுன
3. சிங்கள பல மண்டலய
4. சிங்கள ஜனதா பெரமுன
5. தேசப்ரேமி தருண பிக்கு சம்விதானய
6. மானவ இதவாதி பிக்கு சம்விதானய
7. லோக சம மகா சம்மேளனய
8. சிறிலங்கா ஏக்சத் பௌத்த மகா சம்மேளனய
9. சிங்கள சம்வர்த்தன சம்விதானய
10. சிறிலங்கா தேசப்ரேமி பெரமுன
11. ஏக்சத் திரிசிங்கள விமுக்தி சம்விதானய
12. ததிலி சேனநாயக்க குணனுஸ்மரண மகா சங்கமய
13. சிங்களே தருண பெரமுன
14. சிங்களே ஜனதாவாது காம்கரு சங்கமய
15. பௌத்த சகா சம்மேளனய
16. கலனிபுர பௌத்த பல மண்டலய
17. அநகாரிக தர்மபால தருண சமிதிய
18. சிறிலங்கா பௌத்தசமிதி நியோஜித சம்மேளனய
19. சிங்கள காந்த பெரமுன
20. பரம விஞ்ஞானார்த்த பௌத்த சமிதிய
21. சமஸ்தலங்கா புகனிசீலி பிக்கு பெரமுன.

இவையனைத்தின் மீதான விமரிசனங்களையும் இங்கே கூறிவிடமுடியும் என்று நான் நினைக்கவில்லை. இவற்றில் சில எனக்கு மட்டுமின்றி இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தாருக்கும் கூடத் தெரியாத இரகசிய இயக்கங்களாகும்.

www.padippakam.com

இவற்றில் முதலிரண்டு அமைப்புகள் முறையே சிறி லங்கா சுதந்திரக் கட்சி, மகாஜன ஏக்சத் பெரமுன ஆகிய கட்சிகளைச் சார்ந்தவையாகும். எனவே தா. பா. ப. அமைப்பு பூர்ஷ்வா எதிர்க்கட்சியினரின் பங்குபற்றுதலுடன் நடத்தப் பெறுவதுதான் என்பது தெளிவாகிறது.

சிங்கள பல மண்டலய இவ்வரிசையில் மூன்றாமிடத்தைப் பெறுகிறது. இது ஒரு அரசியல் கட்சி அமைப்பல்ல; மாறாக அது ஒரு இலட்சியவாத இயக்கமாகும். இதுவுமே மாகாணசபைத் தீர்வை எதிர்த்து வருகிறது. இவ்வியக்கத்தின் ஐரோப்பியக் கிளை வெளியீடான சிங்கள ஹண்டா என்ற புத்தகத்தில் இதற்கான ஆதாரமுள்ளது.

இப் புத்தகமானது லண்டன் மாநகரிலுள்ள பௌத்த விகாரையின் அதிபதியானவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை அநாகரிக தர்மபாலாவுடன் ஒப்பிட்டுப் பேசியதை வன்மையாகக் கண்டிக்கிறது. மாகாண சபைத் தீர்வானது சிங்கள மக்களைக் காட்டிக் கொடுப்பதாகும் என்று இதில் கூறப்பட்டுள்ளது. இப்புத்தகம் ஜெயவர்த்தனவைப் பற்றி மேலும் கூறியுள்ளதாவது: ''அநாகரிக தர்மபால பௌத்தத்தின் காவலர். ஆனால் ஜெயவர்த்தனவோ பௌத்தத்தையும் சிங்கள இனத்தையும் அழிப்பவராவர்! இவர்களை ஒப்பிடுவது அறிவீனமாகும். வரலாற்றில் ஜெயவர்த்தன, பௌத்தத்தையும் சிங்கள இனத்தையும் அழிக்க வழிகோலியவர் என்ற தீர்ப்பைப் பெறுவார்.''

சிங்களபல மண்டலய அமைப்பும் 22 பிற அமைப்புகளின் முன்னணியாகும். இவற்றில் சமஸ்த லங்கா அமத்யப தருண சம்விதான அமைப்பு பிரிட்டன், பிரான்சு மற்றும் அமெரிக்க நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது. இவையும், தமிழ்ப் போராளிக் குழுக்களும் வெளிநாடுகளில் வாழும் சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே (இதில் தமிழ் அகதிகளும் அடக்கப) ஒரு கருத்துப்பரிமாற்றம் ஏற்படுவதைத் தடுத்துள்ளன.

மேற்கூறப்பட்டுள்ள வரிசையில் ஆறாவதான மானவ இதவாதி பிக்கு சமவிதானய என்கிற மனிதாபிமான பிக்கு அமைப்பைப் பற்றி இரு கட்டுரைகளை நான் ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ளேன்.

முதலில் ''மண்ணின் மைந்தர்'' கொள்கையை எதிர்த்து புதிய மாற்று மதிபபீடுகளை இவ்வமைப்பு முன்வைத்தது. புத்தர் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகக் காட்டப்பெற்று



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை இறையியல் (Liberation Theology) முன் வைக்கப் பட்டது. அமெரிக்காவில் உருவாகிக் கலைஞர்களாலும், பிற தத்துவவாதிகளாலும் ஏற்கப்பட்ட ''பங்குபற்றும் பௌத்தத்தின்'' (Engaged Buddhism) கோட்பாடுகள் முன் நிறுத்தப்பட்டன. வண. பிதா. திஸ்ஸா பாலசூரியா மற்றும் இலங்கையின் தலைசிறந்த சமூக ஆராய்ச்சியாளரான குமாரி ஜெயவர்த்தன ஆகியோர் இவ்வமைப்பின் வெளியீடான வினவித பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினர்.

இவ்வமைப்பின் கோட்பாடானது இனவாதத்தைப் பௌத்தமத சங்கத்துள்ளும் வெளியேயும் எதிர்ப்பதாகும். ஆயின், இவ்வமைப்பின் இன்றைய செயல்பாடுகள் இனவாதத்தைக் கொண்டுள்ள அமைப்புகளுடன் கலந்து விட்டன என்றே கூற வேண்டும். பௌத்தபிக்குகளுக்கே உரித்தான உயர்குடிவாதம், ஈழக் கோரிக்கையை எதிர்க்கும் போக்கு மற்றும் ஜே. வி. பி. இயக்கத்தாருடன் இருந்த தொடர்புகள் ஆகியவையும் ஏற்கனவே இருந்தவைதாம். ஜே. வி. பி. யின் பௌத்த சமயப் பத்திரிகையான விமுத்திகம, வினவிதவுடன் தொடர்புள்ளதாகும். இப்போது இவ்வமைப்பும் தா.பா.ப. அமைப்பினதின் ''ஒற்றுமை'', ''இறையாண்மை'' ஆகியவற்றை ஒப்புக்கொண்டு அதனுடன் இணைந்து விட்டதாகவே தெரிகிறது.

ஜே. வி. பி. இயக்கத்தின் தலைவரும், கடந்த பல வருடங்களாகத் தலைமறைவாக இருந்து வருபவருமான ரோகண விஜயவீரா, 1986 ஏப்ரலில் 315 பக்கங்களடங்கிய புதிய புத்தகமொன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இது மாகாண சபைத்தீர்வை வன்மையாக எதிர்த்து ஜெயவர்த்தனவை முதுகெலும்பு அற்றவர் என்று கூறித் 'தமிழீழப் பயங்கரவாதிகளைக்' கண்டித்துள்ளது !'' என்னைப் பொறுத்தவரை தா. பா. ப. அமைப்பினருக்கும், ஜே. வி. பி.க்கும் எந்தவித வித்தியாசமுமில்லை.

இவ்வமைப்பின் இலச்சினை ''ஒற்றுமை'' மற்றும் ''இறையாண்மை'' ஆகியவற்றைக் குறிக்கும். மூன்று சங்கிலி இணைப்புகளைக் கொண்டுள்ளது. நடுவிலுள்ள பௌத்தபிக்குவின் விசிறி ''இறையாண்மை'' யைக் குறிக்கிறது. எனவே இவ்வமைப்பு கூறும், ''ஒற்றுமை''யானது பௌத்தத்தின் கீழ்தான் நிலை நிறுத்தப் பெறவேண்டிய ஒன்றென்பது தெளிவாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

1986 டிசம்பர் பத்தாம் தேதி சர்வதேச மனித உரிமை நாளன்று, இவ்வமைப்பு சிங்கள-தமிழர் இன ஒற்றுமை மற்றும் புரிந்துணர்வுக்காகக் குரல் கொடுத்தது. ஆனால் மனித உரிமைகள் அன்று வலியுறுத்தப்படவில்லை. மாறாக ''தேசிய ஒற்றுமை''யே வலியுறுத்தப்பட்டது. மேலும், இவ்வமைப்பு தமிழிளைஞர்களை பௌத்த பிக்குகளாகச் சேர்த்துக் கொள்ளவும் விழைந்தது. ''பௌத்தச் சிந்தனையைத் தமிழ் பேசும் மக்களிடையே மீண்டும் மலரவிட வேண்டும்'' என்பதைப் பிரகடனம் செய்தது.

எனவே பல்தேசிய இனப்புரிந்துணர்வை இவ்வமைப்பு வளர்க்கப் போவதில்லை என்பது தெளிவு. பௌத்த மதத்தை இலங்கையின் தென்கோடியிலுள்ள தோங்திரா கிராமத்திலிருந்து வடக்கேயுள்ள பருத்தித்துறை வரை பரப்பி விரிவடையச் செய்யும் குறிக்கோளையே இது வலியுறுத்துகிறது. இது இலங்கை தேசியப் பாதுகாப்பு அமைச்சரான லலித் அதுலத் முதலியின் குறிக்கோளான பௌத்தத்தை நாடு முழுதும் எடுத்துச் சென்று அமைதியையும், ஒற்றுமையையும் நிலை நாட்டுவதை ஒத்ததாகும்.

மனிதாபிமான பிக்கு அமைப்பு தா. பா. ப. வுக்குக் கீழ் செயற்படுவதையும் ஜே. வி. பி. இயக்கம் சிறிமாவோ பண்டார நாயகவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் இணக்கம் காட்டுவதையும் நாம் இங்கு இணைத்துக் காண வேண்டும்.

## தா. பா. ப. வின் இரண்டாவது அறிக்கை

இவ்வமைப்பின் இரண்டாவது அறிக்கை இயக்கச் செயல்பாடுகளையும், செயலாளர்கள் மற்றும் நிதி நிலைமை பற்றிய விவரங்களையும் கொண்டுள்ளது. இயக்கச் செயலாளர்களின் பெயர்கள் பின்வருமாறு :

1. வண. மதுலோவாவெ சோபித தேரோ
2. வண. விலெகோட ஆரியவம்ச
3. டாக்டர். நாத் அமரக்கூன்
4. தினேஷ் குணவர்த்தனா
5. லட்சுமண் ஜெயக்கொடி

இதில் சோபித தேரோ அவர்கள் மிகப் பிரபலமான பௌத்தபிக்கு ஆவார். 1970களில் கிராமியக் கலாச்சார



படிப்பகம்

www.padippakam.com

உத்திகளைக் கொண்டு மதப்பிரச்சாரத்தில் ஈடுபட்ட இவர் 1980 களில் அரசியலில் நுழைந்தார். இன்று இவர் சமஸ்த லங்கா அமத்யப தருண சம்விதானய மற்றும் சிங்கள பல மண்டலய ஆகிய அமைப்புக்களின் தலைமைப் பொறுப்பைப் பெற்றுள்ளார். இவர் அந்நிய பிக்கு - மாணவர் உதவி பவுண்டேசனின் தாளாளருமாவார். மற்றும் கொழும்பு கோட்டை நாகவிகாரை மடாலயத்தின் தலைமைப் பொறுப்பிலும் உள்ளார்.

வண. ஆரிய வம்ச (ஆரிய தேவ) மனிதாபிமான பிக்கு அமைப்பைத் தலைமையேற்று நடத்துகிறார்.

டாக்டர் அமரக்கூன் சிறிமாவோ அம்மையாரின் செயலாளராக இருந்தவர்.

தினேஷ் குணவரத்தன மகாஜன ஏக்சத் பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர்.

லட்சுமண் ஜெயக்கொடி சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினராவர்.

கூட்டங்கள் நடத்துவதற்கு அமைப்பாளர்களாகப் பணியாற்றுவோரின் பெயர்கள் பின்வருமாறு :

1. பிரின்ஸ் குணசேகர
2. தினேஷ் குணவர்த்தனா
3. எஸ். கோமஸ்
4. கே. கருணதாச
5. எ. ஆர். ரோட்ரிகோ
6. டி. பி. இ. ஜெயசேகர

இவர்களில் அனைவருமே பூர்ஷ்வா எதிர்க்கட்சியினராவர். பிரின்ஸ் குணசேகர மனித, ஜனநாயக உரிமைகள் கழகத்தின் முன்னாள் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாவார். ஜே. வி. பி. சுதந்திர இயக்கத்தாரில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி செயற்பாடுகளில் ஈடுபட்டதால் இவர் சிறிமாவோ அம்மையாரால் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார். இன்று ஜாதிக பெரமுன மற்றும் தா. பா. ப. அமைப்பில் இணைந்து தீவிர பணியாற்றுகிறார்.

எஸ், கோமஸ் பிரபல வியாபாரியாவார்.

கே. கருணதாச சமூக சேவை செயற்பாடுகளில் பல வருடங்களாக ஈடுபாடு கொண்டவர். தற்போது சிறிலங்கா



படிப்பகம்

www.padippakam.com

தேசப்ரேமி பெரமுன அமைப்பின் தலைமைப் பதவியிலுள்ளார்.

நிதிநிலைமைப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு :-

1. எ. சி. குணரத்னா : இவர் அண்மையில் ருக்மினி சேன நாயக்காவினால் கட்டியெழுப்பப்பட்ட ஏக்சத் லங்கா மகாஜன பெரமுன என்ற பௌத்த தீவிரவாத அமைப்பின் தலைவர்.
2. எஸ். கோமஸ்
3. எஸ். பி. சேனரத்னா : பிரபல வியாபாரி, தொழிலதிபர், சிங்கள பல மண்டலய வின் உறுப்பினர்.
4. பெர்சி கருணரத்னா : வழக்கறிஞர் ஏக்சத் திரிசிங்கள விமுக்தி சம்விதானய அமைப்பின் உறுப்பினர்.
5. டி, பி. இ. ஏகநாயக : இவர் ததிலி சேனநாயக்க குணனுஸ்மரண சங்கமய அமைப்பாளர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் கலாச்சார அமைச்சராக இருந்த திரு. டயசின் நண்பர்.

தா. பா. ப. அமைப்புக்குத் தலைவரோ, தாளாளர்களோ இதுவரை யாருமில்லை. இவ்வியக்கம் தற்போதுதான் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதால் இதன் தலைமைப் பதவி யாருக்கு என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. தா. பா. ப. இயக்கத்துக்குத் தொடர்புள்ள பிற இயக்கங்களைப் பற்றிய விபரங்களும் அறிக்கையிலுள்ளன. இவ்விவரங்களில் தலைவர்களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள் ஆகியவையடங்கும். அமைப்புக்களின் பெயர்கள் பின்வருமாறு :

1. மகாஜன ஏக்சத் பெரமுன
2. சிங்களபல மண்டலய
3. சிங்கள ஜனதா பெரமுன
4. சிறிலங்கா நிடஹாசபக்சய
5. மானவ இதவாதி பிக்கு சம்விதானய
6. லோகசய மகா சங்க சம்மேளனய
7. சிறிலங்கா ஏக்சத் பௌத்த மகாசம்மேளனய
8. சிங்கள சம்வர்த்தன சம்விதானய
9. சிறிலங்கா தேசப்ரேமி பெரமுன
10. ததிலி சேனநாயக்க குணனுஸ்மரண சங்கமய
11. கவனிபுர பௌத்த பலமண்டலய
12. சிங்கள காந்தா பெரமுன (நுகேகுட)



படிப்பகம்

www.padippakam.com

13. சிங்கள காந்தா பெரமுன
14. சிங்கள காந்தா சமிதிய (கொழும்பு)
15. மகாகன சுபசித்திய பதனநிதி பெரமுன
16. மாலிகாவத்த தருண பௌத்த சங்கமய
17. (அ) ஏல உருமய (நுகேகுட)
    (ஆ) ஏல உருமய (லவினிய மலை)
18. கலனி தருண பௌத்த சமிதிய
19. ஏக்சத் லங்க மகாஜன சபாவ
20. (அ) சிங்களே தருண பெரமுன
    (ஆ) சிங்களே ஜனதா வாது சேவக சங்கமய
21. (அ) சமஸ்த லங்கா தகம்பசல் சம்விதானய
    (ஆ) ராஜ்ய சேவா ஏதி சங்கமய
22. ஏக்சத்திரி சிங்கள விமுக்தி சம்விதானய
23. தகம்த்வயின ரக்ன சக பரபுரா
24. தேசப்பிரேமி தருணபிக்கு சம்விதானய
25. அநகாரிக தர்மபால தருண சமிதிய
26. தேசப்ரேமி நிதிண சங்கமய
27. சிறிரோகண சங்க சபாவ
28. சிங்கள சுப சாதக பெரமுன
29. சிங்கள பௌத்த பெரமுன
30. பௌத்த சமாஜ ஆர்திக சம்வர்த்தன ஆயதனய
31. ஏக்சத் லங்கா சிங்கள பெரமுன.

இவற்றில் மகாஜன ஏக்சத் பெரமுன கட்சி முதலிடம் வகிப்பதையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பு நான்காவது இடத்தை வகிப்பதையும் காணலாம். மேலும், சிங்கள காந்தா பெரமுன மற்றும் சிங்கள காந்தா சமிதிய ஆகியவை பெண்கள் அமைப்புகளாகும். ஏல உருமய அமைப் பின் இரண்டு கிளைகள் இதில் பங்கு பற்றுவதையும் காண வேண்டும்.

மேலும் முதல் அறிக்கையிலிருந்த நான்கு அமைப்புகள் இரண்டாவது அறிக்கையில் இடம் பெறவில்லை, இதனால் தா. பா. ப. அமைப்பில் பலரும் வந்து போகக்கூடிய சூழ் நிலையுள்ளது என்பது தெளிவு.

நவம்பர் மாதத்தில் இதில் பங்கு பற்றும் அமைப்பு களின் எண்ணிக்கை நாற்பதாக உயர்ந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. சேர்ந்துள்ள ஒன்பது அமைப்புகள் பற்றிய தெளிவான விவரங்கள் தெரியவில்லை. தா. பா. ப. அமைப் பில் பங்குபற்றும் அமைப்புகளில் இலங்கை அரசு சார்பாக

www.padippakam.com

நடத்தப்பெறும் அமைப்பான சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சம்விதானய இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மூன்றாவது அறிக்கை

தா.பா.ப. அமைப்பின் மூன்றாவது அறிக்கை 1986, நவம்பர் 10 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது. செயலாளர் குழுவொன்றால் கைச்சாத்திடப்பட்ட இந்த அறிக்கையில் மாவட்ட அமைப்புகளைக் கட்டியெழுப்புவது பற்றிய விவரங்களும் உள்ளன. செயலாளர் குழுவிலுள்ளவர்கள் பின்வருமாறு :

1. வண. மதுலோவாவெ சோபித தேரோ
2. தினேஷ் குணவர்த்தன
3. டாக்டர் நாத் அமரக்கூன்.

அறிக்கையில் தா.பா.ப. வின் குறுகிய கால வரலாறு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

''இந்தியாவில் பீகார் மாநிலத்திலுள்ள சாஞ்சி பௌத்த விகாரையின் மடாதிபதியான வண. நாயக தேரோ பண்ணா திஸ்ஸ (இவர் ஒரு சிங்களவர்) விடுத்த வேண்டுகோளின் படி 1986 ஜூலை 26 ஆம் தேதியன்று 21 அமைப்புகள் தெமதகொட என்ற இடத்திலுள்ள பதனகர மடாலயத்தில் கூடி தா.பா.ப. அமைப்பை நிறுவின. தற்போது இவை நாற்பதாக அதிகரித்துள்ளன. இக்குறுகிய காலத்தில் தா.பா.ப. அமைப்பானது முப்பதுக்கும் மேற்பட்ட பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளது. இக் கூட்டங்களிலும் விவாதங்களிலும் தெளிவாக்கப்பட்டது என்ன ? ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் மாகாணசபைத் தீர்வானது நாட்டைப்பிளவு படுத்தும் முயற்சியும் சதியுமாகும்''

அறிக்கை மேலும் கூறுவதாவது :

''அரசுக்கு நன்றாகத் தெரியும். மக்கள் மாகாண சபைத் தீர்வை எதிர்க்கிறார்கள். ஆயினும் அரசு தமிழீழப் பயங்கரவாதிகளை ஊக்குவித்து, அவர்கள் கோரிக்கைகளை ஏற்க முற்படுகிறது. எந்த நிமிடத்திலும் நமது தாய்நாடு பிளவு படுத்தப்படலாம். நாம் இனிச் செய்ய வேண்டியது என்ன?''

இக்கேள்விக்கு இந்த அறிக்கை நேரடியாக பதிலளிக்க வில்லை. ஆனால் இலங்கையில் நிலவும் அரசியல் நிலைமை பற்றிய தன் கணிப்பை அறிக்கை முன்வைக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

''கடந்த ஐந்து ஆண்டுகளாக இனப்பிரச்சினை குறித்து அரசு கொண்டிருக்கும் கொள்கையாலும், தமிழீழப் பயங்கர வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாலும் பெரும் பான்மை மக்களை அரசு உதாசீனப்படுத்தி விட்டதாகவும்'' அறிக்கை குற்றம் சாட்டுகிறது: ''பெரும்பான்மை மக்கள் நாட்டின் ஒற்றுமையும், இறையாண்மையும் காக்கப்பட வேண்டுமென்றும், அமைதி காக்கப்படவேண்டும் என்றே விரும்புகிறார்கள்''.

இவ்விரண்டு கருத்தாக்கங்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டனவாகும். மகாவம்ச நூலின் ஏகசத்தா எனும் கருத்தாக்கமே இது. பாலி மொழியில் ஏகசத்தா என்பது ''ஒரு குடையின்கீழ்'' என்று பொருள்படும். துட்டகைமுனு மன்னனின் வரலாற்றாசிரியர்களால் பயன் படுத்தப் பெற்ற வார்த்தையான ஏகசத்தா என்பது சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை இலங்கைத் தீவு முழுவதும் பரப்பும் பொருளையே கொண்டுள்ளது.

பிற தேசிய இனங்களையோ, மதங்களையோ இக்கருத் தாக்கம் ஒழித்துக்கட்டுமாறு கூறவில்லை. ஆனால், அவற்றை அதிகபட்சம் தனிமனித வாழ்வுடன் குறுக்கிவிட இது விழைகிறது. சமூக, தேசிய வாழ்வில் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் வரவேண்டிய கட்டாயம் இத்தேசிய இனங்களுக்கு ஏற்படுகின்றது. இலங்கை அரசியல் சட்டத்தில் 1972 மற்றும் 1978 ஆகிய ஆண்டுகளில் முறையே சிறிமா வோ பண்டாரநாயக்க, ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு களால் செய்யப்பட்ட அரசியல்சட்ட மாற்றங்கள் ஏகசத்தா கருத்தாக்கத்தின் இறுதிக்கட்ட வளர்ச்சி நிலையையே குறிக் கின்றன.

ஏகசத்தா கருத்தாக்கத்தை மீண்டும் ஆராய்வோம். இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக் கொடியே ஏகசத்தாவின் இன்னொரு உருவகமாகும். இவ்விரு உருவ கங்களுக்குள் உள்ள உறவாக ''சிங்கக் கொடியின் மீது ஆணையாக'' என்ற போர்ப்பாடல் ஒன்றைக் கூறலாம். இளைஞர் இசைக்குழு என்ற அரசு அமைப்பால் தயாரிக்கப் பெற்று காஸட்டுகளாகச் சென்ற வருடம் விநியோகிக்கப் பட்டது. முதன்முதலாக 1985 டிசம்பர் மாதம் கொழும்பு நகரத்தில் பிளவர்ஸ் சாலையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத் தலைமையகத்தில் இப்பாடல் பாடப் பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

தென்னிலங்கை முழுவதும் குறைந்த விலையில் கிடைக்கும் இக் காஸட்டின் பெயர்: **ரண கீ யோவன் கீ 27.**

பாடல் பின் வருமாறு:

சிம்ஹ கொடிய லங்கா!
ஏல சேசத யட
டுன் சிம்ஹலயம அக்கரன்னமோ
ஏல ஜாதிக சாமய ரகின்னமோ
சாப தீசியவஸ் கய ரக்னே ஆயி
தினுதய மிஹிபித நோரகே நம
பியவீ, ஹங்கி இன்னே குமவத
பன துன் மவபீம பிரிகேநம
சிம்ஹ கொடிய லங்கா!
மரநின் மதுட சுரசப பதமுட
சடுருமுவத தய பிலிவே நம
ஹிருகென் ஸண்டுகென் வண்டும் லபண ரத
சிரகீமத வேமு சுடா நம
சிம்ஹ கொடிய லங்கா!

பாடலின் தமிழாக்கம் பின்வருமாறு:

சிங்கக் கொடியின் மீது ஆணை!
சிங்களரின் வெண்குடைக்கீழ்
மூன்று சிங்களப் பிரதேசத்தையும் கொணர்வோம்!
சிங்கக் கொடியின் மீது ஆணை!
சிங்களரின் வெண்குடைக்கீழ்
சிங்களரின் அமைதியைப் பாதுகாப்போம்!
இவ்வுடல் நூறாண்டு காலம் வாழ்வது ஏன்?
நம் இனம் காக்கப்படுவதற்காகவே!
எல்லோரும் ஒளித்தொளிந்து வாழ்வது எதற்காக
நம் பூமி சீரழிந்து போய்விடும் இக்காலத்தில்?
சிங்கக் கொடியின் மீது ஆணை!
நாம் ஏன் சுகங்களை அனுபவிக்க வேண்டும்,
நமது நாடு எதிரியின் வாயால் விழுங்கப்படும் போது?
ஞாயிறும், திங்களும் வணங்கும்
நமது பூமியை, நாட்டைப் பாதுகாப்போம்,
சிங்கக் கொடியின் மீது ஆணை!

இப்பாட்டின் முதல் செய்யுளில், சிங்கள இனம் ஜாதிய என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. சிங்களம் என்ற



படிப்பகம்

www.padippakam.com

நவீன சொல்லுக்குப் பதில் ஏல என்ற பழங்காலப்பெருமையை உணர்த்தும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

டுன் சிம்ஹலயம—மூன்று சிங்களப் பிரதேசங்கள் ஆகும். இவை, உறுகுணை (தெற்கு) மாயரட்டை (நடு) இராஜ ரட்டை (வடக்கு) ஆகியவையாகும். முழுத்தீவில் தனியரசு எதுவும் இல்லாமல், பொதுவான சிங்கள-பௌத்த மேலா திக்கமே தொடர்ந்து நிலைத்திருந்ததாக இது குறிக் கின்றது. தமிழ் வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படும் 13 ஆம் நூற்றாண்டில் இருந்து போர்த்துகீசியர் நுழையும் 1621 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் இருந்த சுதந் திரத் தமிழரசு அமைப்பை இது மறுக்கிறது.

முதற்செய்யுளில், சிங்கக்கொடியே சிங்கள இனத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் குடையாக உணர்த்தப்படுகிறது. இரண்டாவது செய்யுளில் சிங்கள இனத்தையும், சீரழிந்த நாட்டையும் அதன் எதிரிகளிடமிருந்து காக்க முடியா விட்டால் வாழ்வே அர்த்தமற்றது என்று கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது செய்யுள், நாடு, சூரிய, சந்திரர்களால் வணங்கப்படுவதாகச் சொல்கிறது. 'சூரிய' சந்திரர்கள் வணங்குவது புத்த பெருமானையாகும். எனவே இங்கு புத்தரை நாடு என்பது இடமாற்றம் செய்கிறது! இதி லொன்றும் வியப்பில்லை. ஏனெனில் ''மண்ணின் மைந்தர்'' கொள்கைப்படி நாடென்பது புத்தபெருமானின் நாடாகும். மூன்றாவது செய்யுளில் நாடு எதிரியை எதிர்நோக்கும் போது, அதனுதவிக்கு வராதவர்கள் கண்டிக்கப்படு கிறார்கள்.

தா. பா. ப. அமைப்பால் இப்பாடல் பொதுக் கூட்டங் களில் பாடப் பட்டாலும் அது வியப்பல்ல. ஏற்கனவே இப் பாடலில் மவபீம (தாய்நாடு) சுரகீம (பாதுகாப்பு) போன்ற வார்த்தைகள் மற்றும் ''ஒற்றுமை'', ''இறையாண்மை'' ஆகியவை வெண்குடை, சிங்கக்கொடி ஆகியவற்றால் குறிக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் போக்குவரத்து அமைச்சரும், பௌத்த மத சங்கத்துடன் நெருங்கிய உறவு கொண்டவருமான எம். எஸ். அமரசிறி கூறுகிறார்: ''சிங்கள அரசர்கள் காலத் தில் மக்கள் அனுபவித்த பெருமிதத்தையும், தேசியப்பற்றை யும் எங்கள் தேசியக் கலாச்சாரத்தின் வரலாற்று பெருமை யாகக் கொண்டுள்ளோம். எங்கள் தேசியப் பற்றையும், வீரத் தையும் குறிக்குமுகமாகவே தோந்திராவிலிருந்து பருத்தித்



படிப்பகம்

www.padippakam.com

துறை வரை ஒரே கொடியைப் பறக்கச் செய்யும் இயக்கத்தைத் துவங்கியுள்ளோம்.''

இங்கே ''ஒற்றுமை'' என்பது சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தைக் குறிக்கும். முன்னாள் அமைச்சரும், இனவாதத்தைத் தூண்டிவிட்டவருமான சிறில்மத்யூ எழுதிய கவுட கொட்டியா? (புலி யார்?) என்ற புத்தகத்தில் சிங்கக் கொடியானது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பறப்பது போன்ற வரைபடம் உள்ளது. அதில் சிங்கள விவசாயி ஒருவர் தம்மைத் தாக்கும் புலியிடமிருந்து ஈட்டியால் கொடியைக் காப்பாற்றுகிறார். இங்கு மீண்டும் மகாவம்சப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள பண்பாடு நினைவுறுத்தப்படுகிறது. ஈட்டியே துட்டகைமுனு தமிழர்களைக் கொன்று குவித்த ஆயுதமாகும். இலங்கையின் தேசியக் கொடியையும், சிங்கக் கொடியையும் ஒப்பிட்டால் சிங்களர்கள் கூறும் ''ஒற்றுமை'' பற்றிப் புரிந்து கொள்ள இயலும்.

இலங்கை தேசியக் கொடியில் சிங்க உருவம் தவிர பச்சை மற்றும் ஆரஞ்சு நிறக்கோடுகள் இரண்டுண்டு. இவை தமிழர்களையும், முஸ்லிம்களையும் குறிப்பதாகும். ஆனால் சிங்கள-பௌத்த சிங்கக்கொடியானது கண்டி அரசின் கடைசி அரசனின் கொடியாகும். மகராகமவிலுள்ள வச்சிராகண பௌத்த விகாரையின் வெளியீடான தர்மவிஜயவின் 1986 அக்டோபர் மாத இதழ் கூறுவதுபோல, சிங்கக் கொடியே சிங்களத்துவத்தையும், பௌத்த மத உணர்வையும் நிலைநிறுத்தும் சின்னமாகும். சிங்கள-பௌத்த சிங்கக் கொடியே அனைத்து அரசு விழா, வைபவங்களில் ஏற்றப்பட வேண்டும் என்று அவ்விதழ் கோருகிறது. இது மெய்ப்பிக்கப்பட்டால், இலங்கைத் தீவின் இருபெரும் சிறுபான்மையினர் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்துள் தமக்குக் கிடைக்கப்பெற்ற இடத்தையும் இழந்து விடுவர்.

துட்டகைமுனுவின் கொடியென்று கூறப்படும் கொடியும் சூரியன், சந்திரன் மற்றும் சிங்கத்தைக் கொண்டுள்ளது. இக்கொடியானது தம்புளை ஓவியங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. துட்டகைமுனு தன் எதிரிகளை ஒழித்து சிங்களக் கொடியை நிலைநாட்டியதுபோல், இலங்கைத் தீவில் ''ஒற்றுமை''யை நிலைநாட்ட தமிழர்களை வெல்ல வேண்டும் என்ற மறைமுகக் குறிப்பை இதனின்றும் புரிந்து கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

சிங்கள-பௌத்தக் கொடியும், துட்டகைமுனுவின் கொடியும் ஐம்பதே ரூபாய்க்கு வச்சிராகண விகாரையில் சர்வ சாதாரணமாக விற்கப்படுகிறது.

எனவே, ''ஒற்றுமை'' மற்றும் ''இறையாண்மை'' ஆகிய கருத்தாக்கங்கள் இலங்கைத் தீவில் உண்மையான தொரு அதிகாரப் பரவலுள்ள ஒரு கூட்டாட்சி (Federal) அரசியலமைப்பை நோக்கிச் செல்லவில்லை என்பது தெளிவு. ''ஒற்றுமை'' என்பது ''ஒன்றி வாழ்வதோ'', ''இறை-யாண்மை'' என்பது வகுத்து வாழ்வதோ, ஒற்றுமை என்ற கருத்தாக்க சட்ட-அதிகார வரம்புக்குட்பட்ட ஒன்றல்ல. மாறாக, மாயாவாதத்துடன் (Metaphysical) சம்பந்தப்பட்ட ஒரு கருத்தாக்கமாகும்.

தா. பா. ப. அமைப்பானது, இலங்கையின் 1975 ஆம் வருட அரசியல் சட்டத்தில் இடம்பெறும் சிங்கள மொழி யாக்கத்திலிருந்து (Sinhala language domination) இவ் வார்த்தைகளை சுவீகரிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அரசியல் சட்டத்தின் சரத்துக்கள் 2, 3 இல் குறிப்பிடப்படும் வார்த்தைகள் ஏகிய ராஜ்ய மற்றும் பரமதிபதிய ஆகும் ஆனால் தா. பா. ப. அமைப்பின் வார்த்தைகளோ ஏகியபாவய மற்றும் ஸ்வைரிபாவய ஆகும். இவை சட்ட அதிகார வார்த்தைகளோ, கருத்தாக்கங் களோ அல்ல. மாறாக, உலக எதார்த்த நிலைகளிலிருந்து பிய்த்தெடுக்கப்பட்ட கருத்தாக்கங்களாகும். இலங்கையின் நிதியமைச்சரும் அரசியலில் மிதவாதியாகக் கருதப்படுபவரு மான ரோனி டிமெல் கூட இவ்வொற்றுமைக்காகத் தன்னு யிரைத் தியாகம் செய்யவும் தயாராயுள்ளதாய் பலமுறை கூறியுள்ளார்.

மாகாண சபை குறித்த அரசின் தீர்வுகளை எதிர்த்து பௌத்த மத சங்கம், மலவது மகாவிகாரை, மகாசங்க சபாவ மற்றும் றமன்ன நிகய அமைப்புகள் மூலமாக விடுத் துள்ள அறிக்கைகளில் ''ஒற்றுமை'' பற்றிய பிரத்யேகக் கருத்தாக்கங்கள் தெளிவாக்கப் பட்டுள்ளன. ''ஒற்றுமை என் பது அரசியல் கட்சிகளையும், அமைப்புகளையுமே மீறிய ஒன்றாகும். பல அரசியல் கட்சிகள் நாட்டில் இயங்குவ தென்பது ஒற்றுமைக்கு எதிரானதாகும்''.

தா. பா. ப. அமைப்பும் அரசியல் கட்சிகளுக்கு இடையே யான கொள்கை மாறுபாடுகளை எதிர்க்கிறது. ஆனால்,



படிப்பகம்

பௌத்த மத சங்கத்தின் 'அறிக்கை இதை விரிவாக்கிக் கூறு கிறது:

''நம்நாட்டுக்கு ஏற்பட்ட பெரும் சீரழிவு கட்சிசார் அரசியல் (Party Politics) ஆகும். சிங்கள இனத்தைப் பிளவு படுத்தியும், பிற இனங்களிடம் இனவாதத்தை உருவாக்கியும் வேடிக்கை பார்ப்பதற்கு முக்கிய காரணம் அரசியல் கட்சி கள் ஆகும். எனவே, நமது காரியக் குழுவானது ஒருமைப் பாடுள்ள இலங்கையில் ஜனநாயக அமைப்பினை ஏற்படுத்து வதற்காக, கட்சிசார் அரசியலை உடனடியாகத் தடை செய்யக் கோருகிறது. பின்பு அரசு ஒரு பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்.''

சிங்களவர் பிளவு பட்டிருப்பதற்கு காரணம் கட்சிசார் அரசியல். பிற இனங்கள் தனது உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்குக் காரணமும் கட்சிசார் அரசியலே! இக் கட்சிசார் அரசியலை தடைசெய்த பின்னர் பொதுத்தேர்த லில் போட்டியிடப் போவதும் வெற்றி பெறப் போவதும் யாரென்று இவ்வறிக்கை தெளிவுபடுத்தவில்லை.

றமன்ன நிகய அமைப்பும் கட்சிகளுக்கிடையிலான கொள்கை மாறுபாடுகள் அழிக்கப்பட வேண்டுமென்கிறது.

அமரபுர நிகய விகாரையின் மகாநாயகரான வண. மதிகே பண்ணாசிக 1968 ஆம் ஆண்டிலேயே மாவட்ட அபி விருத்தி சபைகளை அமைப்பது தனி ஈழம் அமையக் காரண மாகி விடுமென்று போராட்டம் நடத்தியவராவார். இவர் கூறியுள்ளதாவது: ''கட்சிசார் அரசியல் நாட்டை துண்டா டத்தான் போகிறது. இன, பிராந்திய, குடும்ப, தனிமனிதப் பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம் அரசியல் கட்சி களே ஆகும். கணவன்-மனைவி சண்டை, குடும்பச்சண்டை கள் ஆகியவற்றுக்கும் கட்சிசார் அரசியலே அடிப்படைக் காரணம்''.

1968-லேயே இவர் கட்சிசார் அரசியலை ஒழித்துவிட்டு நாட்டையாள, ஏழு ''நல்ல மனிதர்கள்'' அடங்கிய ஒரு குழுவை நியமிக்க இவர் வேண்டினார். அரசியல் கட்சி களற்ற புதிய அரசியல் யாப்பையும் கோரினார்.

''ஒற்றுமை'' என்பது பௌத்த மத சங்கத்தைப் பொறுத்த வரை கட்சி அரசியலுடன் ஒத்துப் போக முடியாதது. பின் பௌத்தமத சங்கம் எவ்வித அரசியல் அமைப்பைத்தான் விழைகிறது? நாடாளுமன்றத்தை மீறிய புதியதோர் அமைப்பை பிக்குகள் விழைகிறார்கள் என்று தெரிகிறது.

நேரடி அரசியலில் பங்கு பெறுவது அவர்தம் அந்தஸ்தைக் குறைப்பதால், திரைமறைவு அரசியல் செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடக் கூடும்-காலனிய ஆதிக்கத்துக்கு முற்பட்ட காலத்திய அரசியல் போல!

## தா. பா. ப. கூறும் அமைதி

இலங்கையின் ''ஒற்றுமை'' மற்றும் ''இறையாண்மை'' ஆகியவற்றுடனேயே ''அமைதி'' என்பதும் பேசப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வமைப்பின் மொழி யானது போரையேக் குறிப்பிடுகிறது. ''அமைதி''யை அல்ல. இவ்வமைப்பு தன்னைப் போர் புரியும் ஓர் இயக்கமாகவே கருதிக் கொள்வதும் குறிப்பிடத்தக்கது. இப் போர் பௌத்தப் புராணங்களில் வருவது போல மரனின் ஆசை விளையாட்டுக்களை புத்தபெருமான் வெல்லுவது போலல்ல. மாறாகத் ''தமிழீழப் பயங்கரவாதிகளை''த் தோற்கடிப்பதற் காகவே! வியாபாரய என்ற சொல்லுக்குப் (படைப்) போர், யுத்தம் என்ற அர்த்தமுமுண்டு. யுத்த வியாபாரய என்ற சொல்லும் பயன்படுத்தப்படுவதைக் காண்க.

நான் முற்கூறிய சிங்கக் கொடியின் மீது ஆணை பாடலில் ஏலசாதிக சாமய என்ற சொற்றொடர் உள்ளது. ''சிங்கள இனத்தின் அமைதிக்காக'' என்றே இதை அர்த்தப் படுத்த முடியும். அமைதி என்பது ஓர் இனத்தின் அமைதி பட்டுமே என்றும், அவ்வினத்திலிருந்தே அமைதி என்பது துவங்க வேண்டும் என்றும் இதை அர்த்த படுத்த முடியும்.

இங்கே கூறப்படும் ''அமைதி'' என்பதென்ன? அரசு, சொத்து, பதவி, குடும்ப உறவுகள் மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றை போதிசத்துவரைப் போல துறப்பதால் ஏற்படும் உண்மையான அமைதியைவிட இது மிகவும் வித்தியாசமான தாகும். இது சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தைத் திணிக்க முற்படும் சிங்களச் சார்புள்ள ''அமைதி''யே ஆகும்.

இலங்கையின் இதிகாசங்களில் கூறப்படும் அரசர் களில் ஒருவரான வெசாந்திரர் (போதிசத்துவரின் வழியில் செல்பவர்) அரசைத் துறந்தே அமைதியைப் பேண முடியும் என்று புரிந்தவராவர். இலங்கைப் பண்பாட்டில் முக்கிய மான இடத்தைப் பெறும் வெசாந்திரரின் பெயர், அநகாரிக தர்மபாலவின் புத்தகங்களில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது! அநகாரிக தர்மபால பல வரலாற்று நாயகர்களை உருவாக்கினார். (வெசாந்திரர் அவர்களில்

www.padippakam.com

இல்லை) அவர்கள் அனைவருமே சிங்கள–பௌத்த மேலாதிக்கத்தை விழைந்தவர்களாவர். அவர்களில் தலையாயவர் துட்டகைமுனு. அவருக்கு நேரெதிர் நிலையிலுள்ளவர் வெசாந்திரர்.

## "பயங்கரவாதி" என்பவர் யார்?

சிங்கள-பௌத்த "இறையாண்மை"க் கோரிக்கையை எதிர்க்கும் எவரையும் பயங்கரவாதி என்றழைத்தவர் சிறில் மாத்யூ. பயங்கரவாதிகள் என்பது யாரைக் குறிக்கப் பயன் படலாம்? தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர் கூட இதனால் பயங்கரவாதிகளாகி விடுவர்.

தா. பா. ப. அமைப்பினரால் பயங்கரவாதிகளை விவரிக்கப் பாவிக்கப்படும் சொற்றொடர்கள் மகாவம்சத்திலிருந்து பேணப்பட்டவையாகும். அதில் மாகனின் "காட்டுமிராண்டுத் தமிழர்களின் கூட்டம்" விவரிக்கப்படுவது போலவே இது உள்ளது. இதன்படி, தமிழீழப் போராளிகள் காட்டுமிராண்டிகளாவர்; மற்றும் அவர்கள் சிங்கள சீரழிவுக்கு வழிவகுப்பவர்கள் என்பதாகும். இதையே சிறில் மாத்யூவும் தனது அண்மைக்காலப் புத்தகத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மகாவம்சம் மாகனின் படையெடுப்பை விவரிக்கும்போது, அவர்களின் மதமாகிய இந்து மதத்தைத் "தவறான நம்பிக்கை" என்றழைக்கிறது. இலங்கை மீதான மாகனின் படையெடுப்பை ஒரு மதப் போராகச் சித்தரிக்கவும் இந்நூல் விழைகிறது.

## தற்போதைய அரசியல்நிலை: தா. பா. ப. வின்பார்வை

இதைப் பற்றிய தா. பா. ப. அமைப்பினரின் விளக்கம் பின்வருமாறு:

1. 3,429 சதுரமைல் பரப்பளவு அரசாளும் உரிமை தமிழீழப் பயங்கரவாதிகளுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. நமது அரசு அங்கு வாழும் மக்களுக்கு எவ்வித உதவியும் அளிப்பதில்லை. நமது இராணுவமோ முகாம்களுக்குள் முடங்கி விட்டது. இப்பரப்பில் வாழ்ந்த பெரும்பான்மையான சிங்கள மக்களைப் பயங்கரவாதிகள் கொன்று விட்டனர்.
2. கிழக்கு மாகாணத்திலும் 3,829 சதுரமைல் பரப்புக்கு பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் விரிவாக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டுள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் வாழும் பெரும்பான்மையான சிங்கள முஸ்லிம் மக்கள் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவர். ஈழக் கோரிக்கையை அரசு விட்டுக் கொடுக்கும் போது 1,441 சதுர மைல் பரப்புள்ள வடக்கு மாகாணம் பயங்கரவாதிகளுக்கு போய்ச் சேர்ந்து விடும்.

3. பெரும்பான்மை மக்களின் கருத்துக்களை மதியாத இந்த அரசானது, தற்போது இந்திய அரசு மூலம் பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. சிறிய, பெரிய கிராமங்களில் பயங்கரவாதிகள் கொலைகாரக் காட்டுமிராண்டிச் செயல்களைத் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

4. மலைப் பிரதேசத்துக்கான அரசியல் அதிகாரம் 8,00,000 தமிழ் பேசும் மக்கள் கைக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. இவர்கள் எந்த நிபந்தனையுமின்றி அண்மையில் குடியுரிமை பெற்றவர்களாவர். இவர்களின் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டமான் தேயிலைத் தோட்டங்களில் தமிழ்த் தேசியவாதத்தை வளர்த்தும், சிங்கள மக்களைப் பயமுறுத்தியும் நாட்டைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்.

2,153 சதுரமைல் பரப்பளவுள்ள மத்திய மாகாணமும்,
3,277 சதுரமைல் பரப்புள்ள உவா மாகாணமும்
1,892 சதுரமைல் பரப்புள்ள சபரகமுவ மாகாணமும் இணைக்கப்பட்டு மலைய நாடு மாநிலம் உருவாகும்.

இலங்கையில் இன்று நிலவும் அரசியல் சூழ்நிலை உண்மையில் இப்படித்தான் இருக்கிறதா் என்ற வாதத்திற்கு தா. பா. படையினர் தயாராக இல்லை. அதே நேரத்தில் இவ்வமைப்பு தான்,

1. இலங்கை அரசால் பயங்கரவாதத்தை அடக்க முடியவில்லை என்று குற்றஞ்சாட்டியும் ;
2. பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட மக்களிடையே சிங்கள இனவெறியையும், பயத்தையும் ஏற்படுத்தியும்;
3. இலங்கை அரசின் காட்டிக்கொடுக்கும் போக்கை அம்பலப்படுத்தியும் ;
4. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களிடம் இருந்து வரக்கூடிய அபாயத்தை உணரச் செய்தும் செயலாற்றி வருவதாகக் கூறிக்கொள்கிறது.





படிப்பகம்

www.padippakam.com

இங்கு மலையநாடு என்று குறிக்கப்படும் இடமானது தமிழ்நாடு—அதாவது, இலங்கையின் மத்திய அரசிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காகப் போராடும் தமிழர்களின் நாடு என்ற அர்த்தத்தில் சொல்லப்படுகிறது. மேலும் பத்தாவது மாகாணம் என்ற சொற்றொடரும் அடிக்கடி இவ்வமைப்பால் பாவிக்கப்படுகிறது. இவற்றின் மூலம் உணர்ச்சிமிக்க கோஷங்களை முன்வைத்து மக்களின் அதிருப்தியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள இவ்வமைப்பு தயாராக இருப்பதை அறிய முடிகிறது.

"பயங்கரவாதத்துக்கு" எதிரான நாடுதழுவிய போர் ஒன்றை நடத்த இவ்வமைப்பு விழைகிறது. "ஏனெனில் தமிழ்த்தேசியவாதமானது நாட்டைக் கூறுபோட விழைவதோடு அல்லாமல், இலங்கையில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தலையெடுக்க ஆரம்பித்து விட்டது. மேலும் இதைச் சமாளிப்பதற்கு ஜெயவர்த்தன அரசு முன்வைத்துள்ள மாகாணசபைத் தீர்வைச் சிங்களவர்களும், அமைதியை விரும்பும் பிற சிறுபான்மையினரும் நிராகரித்து விட்டனர். எனவேதான் நாடுதழுவிய போர் ஒன்று தேவை" என்று இவ்வமைப்பு வலியுறுத்துகிறது.

## தா. பா. படையினரின் குறிக்கோள்கள்

இவ்வமைப்பின் குறிக்கோள்களாக அறிக்கை குறிப்பிடுவன பின்வருமாறு :

1. இலங்கைத் தீவான நமது தாயகத்தின் ஒற்றுமையையும், இறையாண்மையையும், பிளவுபடாத தன்மையையும் காக்கும் வகையில் கட்சி, மாகாணம், இனம், மதம் ஆகிய எந்த வேறுபாடுமின்றி மக்களைத் திரட்டி ஒரே அமைப்பாக உருவாக்குது ;
2. இலங்கை நாட்டை ஒரு கூட்டாட்சி அமைப்பாக மாற்றி இறுதியில் இனரீதியாக பிளவுபடுத்தும் பெருஞ்சதியையும், காட்டுமிராண்டித் தனமான திராவிட-தமிழ் பயங்கரவாதிகளின் தாக்குதல்களை முறியடிப்பது ;
3. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு தமது இருப்பிடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்களை மீண்டும் அங்கே குடியமர்த்தி அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவது ;
4. மலைத்தோட்டப் பகுதிகளிலுள்ள சிங்களவர்களை அபாயங்களிலிருந்து காப்பது ;



படிப்பகம்

www.padippakam.com

5. கடந்த 2,500 வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இலங்கையின் தேசிய மரபைப் போற்றிப் பாதுகாப்பது.

இவ்வமைப்பின் முதல் குறிக்கோளாகக் குறிக்கப்படும் ''ஒற்றுமை'', ''இறையாண்மை'' ஆகியவற்றைப் பாதுகாப்பது என்பதை நாம் ஏற்கனவே ஆராய்ந்து விட்டோம். இக்குறிக்கோளை அடைந்திட கட்சி, மாகாணம், இனம், மதம் ஆகிய அனைத்து வேறுபாடுகளையும் களைந்து மக்களை ஒன்றுதிரட்ட வேண்டும் என்று இவ்வறிக்கை கூறுகிறது.

அதேசமயத்தில், பிற நான்கு குறிக்கோள்களாக இவ்வறிக்கை கூறுவன யாவை? இக்குறிக்கோள்கள் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி ஆகியவற்றை முறியடிக்கவும், சிங்கள அகதிகளை மட்டும் பாதுகாக்கவும், மலையகத்திலுள்ள சிங்கள மக்களை மட்டும் பாதுகாக்கவும், மொத்தத்தில் சிங்கள-பௌத்த மேலாதிக்கக் கலாச்சாரத்தைப் பேணிக் காக்கவும் விழைகின்றன.

இங்கு நாம் காணவேண்டியது என்னவென்றால் தா.பா. படையினர் சிங்கள-பௌத்த கலாச்சாரத்தை மட்டுமே பேணப் போவதாக நேரடியாக எங்கும் அறிவிக்கவில்லை. ஆயினும் இவ்வமைப்பு இனரீதியாக நடுநிலை வகிக்கும் ஓர் அமைப்பு அல்ல. மேலும் இவ்வமைப்பின் உறுப்பினர்களதும், இதனுடன் தொடர்பு கொண்ட பிற அமைப்புகளின் பின்னணியையும் வைத்துப் பார்க்கும் போது, இவ்வமைப்பு இனரீதியாக நடுநிலை வகிக்க விழையவில்லை என்பது தெளிவாகிறது. மேலும் இனவெறியர்கள் என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிப்பதற்காகவும், அதேசமயத்தில் சிங்களவர்களிடையே உள்ள முஸ்லீம்கள், கிருத்துவர்கள் ஆகியோரை தன்பக்கம் இழுக்கவுமே ''இனரீதியான நடுநிலை'' என்ற தந்திரமிக்க கோஷத்தை இவ்வமைப்பு பயன்படுத்துகிறது.

இன்னும் சொல்லப் போவதானால் இலங்கை அரசால் முன்வைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தீர்வானது, ஒன்பது மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதாக மட்டுமே உள்ளது. மாறாக ஒரு உண்மையான கூட்டாட்சி அமைப்பை இலங்கையில் கொண்டுவருவதை அது செய்யவில்லை. ஆனால் இந்த மாகாண சபைத்தீர்வையே கூட்டாட்சி அமைப்பு, நாட்டைத் துண்டாட சதி என்றெல்லாம் தா. பா. படையினரின் அறிக்கை கூறுகிறது.



படிப்பகம்

பௌத்த மத சங்கமோ அரசின் மாகாண சபைத் தீர்வை ஆராய்ந்து, அத்தீர்வு இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் அரசியல் சட்டத்தை ஒத்திருக்கிறது என்று கூறியுள்ளது. எனவே பௌத்த மத சங்கத்தைப் பொறுத்தவரையில் கூட்டாட்சி அமைப்பும், மாகாண சபைத் தீர்வும் ஒன்று தான்! தா. பா. படை இதைப் போன்றதான கருத்துக்களையே கொண்டுள்ளது. ஆயினும் மாகாண சபைத்தீர்வு என்பது ஒரு கூட்டாட்சி அமைப்புக்கு இட்டுச் செல்லாது என்பதில் அரசு தன்னளவில் தெளிவாக இருக்கிறது.

பௌத்த மத சங்கமும் தா. பா. படையும் அதிகாரம் பரவலாக்குதலைக் கண்டு பயப்படுவது ஏன்? மாகாண சபைத்தீர்வு நாட்டைத் துண்டாடும் நோக்கத்துடன் இடப்பட்டுள்ள சதித்திட்டம் என்று கூறுவது எதற்காக?

அதிகாரப் பரவலாக்கம் என்பது பௌத்த மதத்துக்கும் இலங்கை அரசுக்குமுள்ள நெருங்கிய தொடர்புகளை நெகிழ்த்தி விடும் என்பதால் பௌத்த மத சங்கம் மாகாண சபைத் தீர்வையே எதிர்க்கிறது. மேலும் மாகாணசபைத் தீர்வானது, இறுதியில் அனைத்து மதங்களின் சமத்துவத்தையும் கூட அங்கீகரிப்பதாகவே முடியக் கூடும் என்பதாலும் பௌத்த மத சங்கம் அத்தீர்வை முழுமுச்சாக எதிர்க்கிறது.

அரசுக்கும், பௌத்த மதத்துக்குமுள்ள உறவானது இலங்கையின் நெடுங்கால வரலாற்றில் பேணப்பட்டு வந்துள்ள உறவாகும். தேவநாம்பியதிஸ்ஸ காலத்திலிருந்து புராண அளவில் இருந்து வந்துள்ள இந்த உறவு துட்டகைமுனுவின் வீரபிரதாபங்களால் ஆழப்படுத்தப்பட்டது. இந்த உறவை பிரிட்டிசாரே கூட 1815 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கண்டி உடன்பாட்டின்படி அங்கீகரிக்க வேண்டியிருந்தது. ஜெயவர்த்தன அரசால் 1978 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட புதிய அரசியல் சட்டத்தில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளது:

''சிறிலங்கா குடியரசு என்பது பௌத்தத்துக்கு முதன்மையான இடத்தை வழங்கும். பௌத்த சாசனத்தையும் தர்மத்தையும் பேணிக்காக்கும் பொறுப்பு அரசுடையதாகும். அதே நேரத்தில் அனைத்து மதங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளையும் அரசு உறுதி செய்யும். இதன்படி அரசியல் சட்டத்தின் பத்தாவது பிரிவில் கூறப்பட்டுள்ள உரிமைகளாகிய மத சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், மத

www.padippakam.com

மாற்றத்துக்கான சுதந்திரம் ஆகியவற்றையும் 14 (1) (9) பிரிவில் கூறப்பட்டுள்ள பேச்சு மற்றும் படிப்பு சுதந்திர உரிமைகளையும் அரசு உறுதி செய்யும்".

பௌத்த மதத்தைப் போலவே சிங்கள மொழிக்கும் அரசியல், சட்டரீதியாக சிறப்பு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. சிங்களமே இலங்கையின் ஒரே அதிகாரப்பூர்வமான மொழியாகும். இதனால்தான் பௌத்த மத சங்கம் மாகாண சபைத் தீர்வை முழுமையாக எதிர்க்கிறது. அதன் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது ;

''மாகாண சபைத் தீர்வு அமுல்படுத்தப்பட்டால் 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்பாட்டில் கூறப்பட்டவை அனைத்தும் இலங்கையின் சட்டநெறிமுறைகளில் இருந்து வெளியேற்றப்பட்டு அர்த்தமிழந்து போய்விடும் என்ற தகவல் எங்களுக்குக் கிடைத்துள்ளது. நாங்கள் இதை வன்மையாக எதிர்க்கிறோம். கண்டி உடன்பாட்டின் ஐந்தாவது பிரிவின் படி பிரிட்டிஷ் அரசரால் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பினை இப்போதுள்ள ஜெயவர்த்தன அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி, 1978 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதிய அரசியல் சட்டத்தின் அடிப்படையில், பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாத்துச் செழுமைப் படுத்தும் பொறுப்பினை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பொறுப்பை அரசு தட்டிக்கழிக்க முடியாது. மாகாண அரசுகள் அல்லாமல் இலங்கையின் மத்திய அரசே இதனை ஏற்று நெறிப்படுத்த வேண்டும்".

பௌத்தமத சங்கத்தின் இவ்வறிக்கையின் படி, பௌத்த மதம் என்பது அரசுமதமாகவே இருத்தல் வேண்டும். அதாவது பௌத்தமத சங்கமானது, நாட்டுப்புற மதம் (folk Church) என்பதற்கும் அரசு மதம் (State Church) என்பதற்கும் எந்த வித்தியாசத்தையும் பாராட்டுவதில்லை என்று தெரிகிறது. மேலும், பௌத்த மதத்தலைவர்கள் அரசுக்கும் மதத்துக்கும் உள்ள தற்கால உறவுகள் தொடர்ந்து அப்படியே நீடிப்பதையே விரும்புகிறார்கள் என்பதும் தெளிவாகியுள்ளது. மேலும் அரசு அலுவல்களும் மத அலுவல்களும் பிரித்து வைக்கப்பட்டுள்ள மேலைநாட்டுச் சமுதாயங்களின் மதச்சார்பற்ற தன்மையை இத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் தெளிவாகிறது. அதாவது, மதச்சார்பற்ற ஒரு புதிய உலகிற்கு ஏற்றவாறு பௌத்த மதத்தை மறுபரிசீலனை செய்துகொள்ள இத் தலைவர்கள் தயாராக இல்லை என்பதும், இறந்தகால சமூக வடிவங்



படிப்பகம்

www.padippakam.com

களையே அவர்கள் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெளிவாகிறது.

## தா. பா. படையினரின் உள் அமைப்பு

தா. பா. படையினரது மேற்கூறப்பட்ட ஐந்து குறிக்கோள்களை நிறைவேற்றுவதை ஒரு தேசியக் கடமையாகக் கருதுகிறது. இதற்காக அமைப்பு ரீதியான வேலைத் திட்டத்தையும் அது முன்வைத்துள்ளது :

1. தா. பா. படையில் பங்குபெறும் நாற்பதுக்கும் மேலான அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடிக்கடி சந்தித்து இக் குறிக்கோள்களை நிறைவேற்றுவது பற்றியும், நாட்டின் முக்கிய பிரச்சினைகளை எதிர்கொள்வது பற்றியும் விவாதிப்பர்.
2. இவ்வமைப்பின் செயலாளர் குழுவில் ஐந்து பௌத்த பிக்குகளும் ஐந்து சாமானியர்களும் அடங்குவர். இக் குழுவானது அனைத்து நிர்வாக வேலைகளையும் கவனிக்கும்.
3. இவ்வமைப்புடன் தொடர்பு கொண்ட பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாவட்ட ஒத்துழைப்புக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவப்பட்டு அந்தந்த மாநிலத்தின் நிர்வாக வேலைகளைக் கவனிக்கும்.
4. கிராமப்புறங்களில் தா. பா. படை கிளைகள் உடனடியாக நிறுவப்படும். சாமானிய மக்களை இவ்வமைப்புக்குள் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பௌத்த மடாலயம், கிறித்துவ ஆலயம் அல்லது இந்துக் கோயில்கள் ஆகியவற்றை மையமாக வைத்து இவ்வமைப்பு இயங்கும்.

இவ்வமைப்பின் செயலாளர் குழுவில் தற்போது இரண்டு பௌத்த பிக்குகளும் பௌத்த மதத்தைச் சார்ந்த மூன்று சாமானியர்களும் உள்ளனர். எனவே இவ்வமைப்பானது பல இன அடிப்படையிலோ இனரீதியாக நடுநிலை வகிப்பது என்ற அடிப்படையிலோ இயங்கவில்லை என்பது இதன் செயலாளர் குழுவைப் பார்த்தாலே தெரிகிறது.

இவ்வமைப்பானது ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாகாண சபை வாரியாக



படிப்பகம்

www.padippakam.com

இது இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு கிராமத்திலும் நூறுபேர் கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப் பட்டு, பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், தொழிலாளி கள், மாணவர்கள் ஆகியோருக்கான முன்னணி அமைப்புக் களும் (front organisation) கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று இவ்வமைப்பு கருதுகிறது.

சமூக வேறுபாடுகளைக் களைய வேண்டும் என்ற குறிக் கோளுடன் இயங்குவதாகச் சொல்லிக் கொள்ளும் இவ்வ மைப்பு, இறுதியில் இனரீதியான பாகுபாட்டையேத் தனது குறிப்பிடப்படாத கொள்கையாக வைத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் வெளியிடப்பட்டுள்ள கொள்கைத் திட்டத்துக்கு நேர் எதிரான வேலைத்திட்டத்தை இவ்வமைப்பு செய்து வருவது தெளிவாகிறது.

இவ்வமைப்பின் மூன்றாவது அறிக்கையானது பின்வரும் வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது :

1. ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் நூறு இளை ஞர்கள் கொண்ட அமைப்புக் குழுக்களை ஏற்படுத்திவிட வேண்டும்.
2. இக்குழுக்களின் மூலம் சாதாரண மனிதர்களுக்கு அவர் கள் தினசரி வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும்.
3. போதை மருந்துகள், சாராயம் ஆகியவற்றைப் பயன் படுத்தும் சீரழிவுப் போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டும்.
4. பயங்கரவாதிகளின் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்டு தமது சொந்த நிலங்களை இழந்து அகதிகளாக மாறி யுள்ளவர்களுக்கு உடனடி உதவி கிடைக்கச் செய்ய வேண்டும்.
5. பயங்கரவாதிகளின் செயல்பாடுகளால் மத நிறுவனங் களுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை முறியடிக்க, அந் நிறுவனங்களைக் காப்பாற்ற, அனைத்து வழிமுறை களையும் மேற்கொள்ள வேண்டும். பௌத்த மடால யங்கள், கிறித்துவ ஆலயங்கள், இந்துக் கோயில்கள் ஆகிய அனைத்து மத நிறுவனங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.
6, தாய்நாட்டைப் பாதுகாக்கும் கடமையில் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் நேரடியாகப் பங்கேற்க



படிப்பகம்

வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும். இதற்காக.

அ. தாய்நாட்டைப் பாதுகாக்கும் இளைஞர் முன்னணி
ஆ. தாய்நாட்டைப் பாதுகாக்கும் பெண்கள் முன்னணி
இ. தாய்நாட்டைப் பாதுகாக்கும் விவசாயிகள் முன்னணி
ஈ. தாய்நாட்டைப் பாதுகாக்கும் தொழிலாளர் முன்னணி
உ. தாய்நாட்டைப் பாதுகாக்கும் மாணவர் முன்னணி

ஆகிய அமைப்புகளை உடனடியாகக் கட்டியெழுப்பி ஒவ்வொரு கிராமத்திலும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை ஒழிக்க வேண்டும். இதற்காக இம்முன்னணி அமைப்புகளுக்கு நமது வேலைத்திட்டத்தில் உரிய பங்கினை அளிக்க வேண்டும்.

அமைப்பு ரீதியான செயல்பாடுகளை அவ்வப்போது விமர்சித்து அவ்விமர்சனத்தை அமைப்பின் மேல்தளங்கள் வரை எட்டச் செய்வதும் உறுதி செய்யப்படும். அமைப்பின் அடித்தளத்தில் பௌத்த மடாலயங்கள், கிறித்துவ ஆலயங்கள், இந்துக் கோயில்கள் இருக்கும்.

இங்கு முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலமான பள்ளி வாசல்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கிறித்துவ ஆலயத்தைக் குறிக்கும் சிங்களச் சொல்லான **பள்ளிய** என்பது மரக்கல **பள்ளிய** எனப்படும் பள்ளிவாசல்களையும் குறிக்கும்.

மேலும் இவ்வமைப்புக்குள் இந்துக் கோயில்களைக் கொண்டு வருவதென்பது இயலாத காரியமாகும். ஏனெனில் கிழக்கு—வடக்கு மாகாணங்களில் வாழும் இந்துக்களை எதிர்த்துத் தெற்கிலுள்ள இந்துக் கோயில்களைப் பயன் படுத்துவது என்பது முடியாது. தெற்கிலுள்ள ஒருசில இந்துக் கோயில்களுமேகூட 1977 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்பும் ஏற்பட்ட கலவரங்களின் போது பெரிதும் பாதிக்கப் பட்டன. தற்போது இக்கோயில்கள் புனரமைப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளன.

எனவே தா. பா. படையினரின் அறிக்கையில் இந்துக் கோயில்களைப் பற்றி குறிப்பிட்டிருப்பது ஓர் அறரீதியான தேவையினால் ஆகும். இலங்கையில் நான்கு மதங்களில் மூன்றை மட்டுமே நீங்கள் குறிப்பிட்டால் நீங்கள் ஒரு இனவாதி என்று கருதப்படுவீர்கள். இதனால்தான் தா. பா. படையினரின் அறிக்கை இந்துக்கோயில்களையும் இணைத்துக்கொள்கிறது!

www.padippakam.com

தா. பா. படையானது ஒரு மதநிறுவனத்தைச் சுற்றியே தனது அடித்தட்டு அமைப்பை கட்டியமைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் மதநிறுவனத்தைச் சுற்றியே அரசியல் அதிகாரம் இயங்குகிறது என்பதை இவ்வமைப்பு ஒத்துக் கொண்டுள்ளது என்றே கொள்ள வேண்டும். இலங்கை அரசின் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் மதஅணியான சமஸ்தலங்கா சிங்கள பௌத்த சம்விதானய அமைப்பும் கூட இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறது! ஆளும் கட்சியின் மதஅணியின் அடித்தள அமைப்புகளில் அந்தந்த கிராமங்களிலுள்ள பௌத்த மடாலயங்களில் உள்ள பிக்குகள் உறுப்பினர்களாக ஆகிவிடுவர்! மேலும் இந்த மத அணியின் அடித்தள அமைப்புக்கள் மாவட்டரீதியிலோ, ஒவ்வொரு கிராமத்திலோ அமைக்கப்படவில்லை; மாறாக, அவை ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலுமாக அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, தா. பா. படையினரின் வேலைத்திட்டம் செயலாக்கப்படும்போது ஒவ்வொரு பௌத்த மடாலயத்திலுள்ள பிக்குகளும் தா. பா. படையின் பிரச்சாரகர்களாலும், சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சமவிதானய அமைப்பின் பிரச்சாரகர்களாலும் சூழப்பட்டிருப்பர். அமைப்பின் செயல்பாடுகளை அவ்வப்போது மறுபரிசீலனை செய்யப்படுவது பற்றி அறிக்கை கூறுவது பின்வருமாறு:

''அமைப்பின் கிளைகள் ஏற்படுத்தப்பட்டபிறகு ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு வாரத்திலும் அல்லது ஒவ்வொரு மாதத்திலும் மறுபரீசீலனை செய்யப்படுவது பற்றிய விமரிசனம் முன்வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலுள்ள கிளைகளின் செயல்பாடுகளும், வேலைத்திட்டத்தில் நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் மேல்தள அமைப்புக்குத் தெரிவிக்க வேண்டும்; முதலில் மாவட்ட அமைப்புகளுக்குத் தெரிவிக்க வேண்டும்; மாவட்ட ஒத்துழைப்புக் குழுக்கள் ஒவ்வொரு மாதமும்கூடி இவற்றை விவாதிக்க வேண்டும். அதன் அடிப்படையில் கிளைகள், நிறுவனங்கள், குழுக்கள் ஆகியவை ஒவ்வொன்றைப் பற்றிய அறிக்கையைத் தலைமை அமைப்புக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இறுதியில் அறிக்கை மக்களின் போர்க்குணம் பற்றிக் கூறி அரசைக் கடுமையாகத் தாக்கி நிறைவுபெறுகிறது:

''தாய்நாட்டைப் பாதுகாக்கும் குறிக்கோளை நிறைவேற்ற நாம் முன்வருவோம்! பயத்தையும், தயக்கத்தையும்



படிப்பகம்

www.padippakam.com

களைந்திட நாம் முன்வருவோம்! அரசு நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கடமையை மக்களாகிய நாம் முன் வந்து நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைகள் இன்று உரு வாகி விட்டதால் நாம் முன்வருவோம்!"

இவ்வறிக்கையைப் பார்க்கும்போது இவ்வமைப்பின் வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படக்கூடியவையாகத் தோன்றவில்லை! மாறாக, கனவுரீதியான ஆசைகளையே வேலைத்திட்ட அறிக்கையைத் தயாரித்தவர்கள் கொண்டுள் ளனர் என்பது தெளிவாகிறது. உதாரணமாக, அமைப்பின் பலமட்டங்களிலும் ஒரே சமயத்தில் அமைப்புக் கூட்டங்கள் நடத்துவது என்பதோ, அமைப்பின் தலைமையோடு தொடர்ந்த செய்தித்தொடர்பை வைத்துக் கொண்டிருப் பதோ, மக்களை நூறுநூறாக என்ற அளவில் குழுக்களாக, கிளைகளாக, நிறுவனங்களாக, பகுதிவாரியாக பிரித்துக் கட்டுவது என்பதோ கிட்டத்தட்ட நடக்கமுடியாத காரியங் களாகும். இந்த அறிக்கையின் இப்பகுதியைத் தயாரித்தவர் கள், நீண்டகால பிரச்சாரம் ஒன்றை அமைப்புரீதியாகக் கட்டி யெழுப்புவதில் எந்தவித முன் அனுபவமும் இல்லாத கனவுலகவாதிகள் என்று தெரியவருகிறது. உதாரணமாக அரசின் மதஅணியுடன் அடித்தளத்தில் போட்டி போட வேண்டிய சூழ்நிலையைக்கூட இவ்வறிக்கையில் எதிர் கொள்ளவில்லை! எனவே தா. பா. படையினரின் பலத்தின் அடிப்படை என்பது நீண்டகால அடிப்படையில் ஓர் அமைப்பைக் கட்டியெழுப்புவது என்பதில்லை. மாறாக, குறுகிய காலத்தில் நாடுதழுவிய அளவில் பேரணிகளையும், கூட்டங்களையும் நடத்தி மக்களைத் திரட்ட முடிவதிலேயே இவ்வமைப்பின் பலம் உள்ளது. இக்கூட்டங்களில் **மதுலுலாவ சோபிததேரோ** போன்ற உணர்ச்சிமயமான பேச்சாளர்கள் உரையாற்றுகின்றனர்.

அரசின் மாகாண சபைத்தீர்வை எதிர்க்கும் ஒரே குறிக் கோளை தா. பா. படை அமைப்பு கொண்டுள்ளது. குறிக் கோளை கூட்டங்கள், பேரணிகள் நடத்துவதன்மூலம் ஓரளவு நிறைவேற்றலாம். ஆனால் நீண்டகால நோக்கில் ஓர் அமைப்பைக் கட்டியெழுப்ப இது உதவாது.

மாகாண சபைத்தீர்வைப் பற்றி அரசு ஒரு இறுதியான முடிவை எடுத்துவிட்டாலோ, திடீரென்று நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதில் பூர்ஷ்வா கட்சிகள் வெற்றி யடைந்துவிட்டாலோ, ஓர் அதிரடி இராணுவக்கிளர்ச்சியின்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டுவிட்டாலோ தா. பா. படையினருக்கான தேவை என்பது காணாமல் போய்விடக்கூடும். தற்போதுள்ள முரண்பாடுகளும் நிச்சய மற்ற சூழ்நிலைகளுமே தா. பா. படையினரின் செல்வாக்கைப் பரப்ப உதவுகின்றன.

தா. பா. படையினரைப் போன்ற அமைப்புக்கள் அவ்வப் போது தோன்றி, ஒரு குறுகிய காலத்தில் செல்வாக்குடன் விளங்கி, மறைந்து விடுகின்றன. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் இவ்வகையான அமைப்புக்கள் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் நிலையே தொடரும். இவ்வமைப்புக்கள் ''மண்ணின் மைந்தர்'' கொள்கையை வலியுறுத்துகின்றன. வசீகரத் தன்மையுள்ள பௌத்த பிக்கு களும், சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருக்கும் ''சாமான்யர் களும்'' இவ்வமைப்புக்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்கின்றனர்.

எனவே இவ்வமைப்புக்களின் கருத்தியலான ''மண்ணின் மைந்தர்'' கொள்கையில் ஒரு நிரந்தரத் தன்மையும் தொடர்ச்சியும் உள்ளன. எனவே தா. பா. படை என்ற ஒரு உதாரணத்தை மட்டும் வைத்து இவ்வமைப்புக்களின் பொதுவான பலத்தை மிகைப்படுத்திப் பேசுவது என்பது தவறான மதிப்பீடுகளுக்கு நம்மை அழைத்துச் செல்லக் கூடும். அதே சமயம் இவ்வமைப்பின் வாழ்வு ஒருசில ஆண்டுகளே என்பதால் இவற்றைக் குறைத்து மதிப் பிடுவதும் தவறேயாகும். தா. பா. படை என்பது நிரந்தர மானதும் தொடர்ச்சியானதுமான ஒரு இனமையக் கருத் தியலின் (ethnnocentric ideology) அமைப்புரீதியான ஒரு வெளிப்பாடு என்பதையும், இன்றைய சமூக முரண்பாட்டுச் சூழ்நிலையில் இவ்வமைப்பு தீவிரப்படுத்தப்பட்ட வெளிப் பாடாகத் தெரிகிறது என்பதையும் உணர்ந்து கொள்வதே இவற்றைப் பற்றிய சரியான பார்வையை அடைய உதவும்.

## விவாதம்

நியூட்டன் குணசிங்க என்ற ஆய்வாளர் இன்றைய இலங்கையில் பௌத்த மத சங்கத்துக்கு உள்ள அதிகாரத்தை ஆராய்ந்துள்ளார். அவரது ஆராய்ச்சியின்படி, ''பௌத்த மத சங்கத்துக்கு முன்பிருந்ததைவிட இன்று அதிகாரங்கள் குறைந்து போய்விட்டன. ஏனெனில், அதன் சமூக அந்தஸ்தை அது இழந்துவிட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், இன்றைய பௌத்த பிக்குகள் சமூகத்தின் கீழ்மட்டங்களி



படிப்பகம்

லிருந்து உருவாகி வருகின்றனர் என்பதாகும். அதே சமயத்தில் பௌத்த மத சங்கமானது இன்றும் சமூகத்தில் ஒரு உயர்ந்த அங்கத்தை வகிக்கிறது. ஏனெனில், நாட்டின் முக்கியத் தொடர்பு சாதனங்கள் பௌத்த மத சங்கத்தை நாட்டின் காவலனாகச் சித்தரிக்கின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களை குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது மூலமே இச்சித்தரிப்பு தொடர்ந்து செய்யப்படுவது சாத்திய மாகிறது.

''இவ்வாறெல்லாம் கூறும் குணசிங்க, தொடர்புசாதனங் களைக் குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது யார் யார் என்று அடையாளம் காட்டுவதில்லை.

குணசிங்கவின் ஆராய்ச்சியின் அடிப்படை பின்வருமாறு:

''சமூக அந்தஸ்தில் இருந்தே அதிகாரம் பிறக்கிறது''

குணசிங்கவின் ஆராய்ச்சியில் நேரடியாகக் கூறப்படாத இக்கருத்தை இன்னும் விரிவாக்கிப் பார்ப்போம்:

''குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தொடர்பு சாதனங்களின் ஆதரவு இல்லாவிட்டால் பௌத்த மத சங்கம் முன்பிருந்ததைவிட இன்னும் குறைந்த அளவு அதிகாரங்களையே பெற்றிருக்கும்; மேலும் பௌத்த மதத் தின் உண்மையான அதிகாரங்கள் இக்குறுகிய நோக்காளர் களுக்குச் சொந்தக்காரர்களிடம் இருந்தே பெறப்படுகின்றன. பௌத்தமத சங்கத்தின் அதிகாரம் என்பது குறியீட்டு (symbolic) அடிப்படையிலேயே அமைந்திருப்பதாகக் குணசிங்க குறிப்பிடுகிறார்.

பௌத்த மத சங்கம் அதிகாரத்தை எப்படிச் செலுத்து கிறது என்பதை நாம் இங்கு ஆராய்ந்துள்ளோம். ஆயினும் நீண்டகால அளவில் பௌத்த மத சங்கத்தின் அதிகாரத்தின் அளவுகள் குறைந்துள்ளனவா அல்லது கூடியுள்ளனவா என்று நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. பௌத்த மத சங்கம் முன்பிருந்ததைவிடக் குறைந்த அளவில் அதிகாரங்களைக் கொண்டுள்ளதா என்றால், அதற்கு உடன டியாக பதிலேதும் சொல்லமுடியாது. ஆனால், பௌத்த மத சங்கம் அதிகாரங்களைச் செலுத்தும் முறைகளில் பல் வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்று நம்மால் உறுதி யாகச் சொல்லமுடியும். இதை குணசிங்க காணத் தவறி விட்டார்! எனவேதான், பௌத்த மத சங்கத்துக்கு இப்போ துள்ள அதிகாரங்கள் முன்பைவிடக் குறைந்தவை என்ற உறுதி செய்யப்படாத நிலைப்பாட்டிற்கும், சங்கத்தின் அதிகாரம்

www.padippakam.com

என்பது குறியீட்டு அளவில் அமைந்தது என்ற தெளிவற்ற கருத்துக்கும் அவர் பலியாகி விட்டார்!

## அதிகாரமும் அந்தஸ்தும்

அதிகாரத்துக்கும் அந்தஸ்துக்கும் உள்ள உறவு ஆசிய சமுதாயங்களில் எப்படி உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள அதிகாரம், அந்தஸ்து ஆகிய சொற்களைப் பற்றிய வரலாற்றி ரீதியான புரிதலை நாம் அடையவேண்டும்.

பௌத்த மத சங்கத்தைப் பொறுத்தவரை, வினய எனும் ஒழுக்க நெறியாலாகிய தனது கட்டுப்பாட்டு அளவுகோலகளை தானே மீறுவதன் மூலமே, சங்கத்தால் இவ்வுலக அதிகாரத்தைச் (this worldly power) செலுத்த முடியும். வினய என்பது என்ன? பொதுவான இந்திய மத மரபுகளின்படி இந்த ஒழுக்கநெறியானது அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றை அடைவது என்பது இருவேறு விதிமுறைகளின்படி நடப்பதாகும். இவ்விதிமுறைகள் ஒன்றின்படி அந்தஸ்தை அடைவதற்கு ஒருவர் துறவு நிலையையோ (renunciation) அரசு மற்றும் சமூகம் ஆகிய களங்களில் தவிர்ப்பு நிலையையோ (avoidance) பற்றி ஒழுகவேண்டும். இவ்விதி முறைகளின் இன்னொன்றின்படி அதிகாரம் என்பது, உற்பத்திக் கருவிகளையும் உற்பத்திச் சக்திகளையும் (இதில் மனிதர்களும் அடங்குவர்) கைப்பற்றி, யுத்தத்தை வருவாய்க்கான ஒரு அடிப்படையாகவும் மாற்றி, பொதுவான ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலம் பெறப்படுகின்றது, அர்த்த சாஸ்திரம் முதலான அரசு பற்றிய இந்திய நூல்களில் இவ்வித முறைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றுக்குள் இருக்கும் உறவானது எப்படிப்பட்டது? ஒரு தராசின் இரு தட்டுக்கள் ஒன்றோடொன்று கொண்டுள்ள உறவை அது ஒத்தது. ஒன்று மேலே ஏறும்போது மற்றது கீழே இறங்குகிறது. இதனால் அதிகாரமும் அந்தஸ்தும் ஒரே சமயத்தில் ஓரிடத்தில் சேர்ந்து காணப்பட முடியாதவை ஆகும். மேலும் ஒன்றிலிருந்து மற்றொன்று பெறப்படுவது இல்லை.

ஆனால் பௌத்த மதத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டால், குறிப்பாக இலங்கையின் பௌத்த மத வரலாற்றை எடுத்துக்கொண்டால் அவ்வரலாறு என்பது அந்தஸ்துக்கான விழைவும் அதிகாரத்துக்கான விழைவும்



படிப்பகம்

www.padippakam.com

கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்துவிடும் போக்கின் வரலாறாகவேத் தெரிகிறது.

பௌத்தமத சங்கமானது,

(1) சொத்துக்களைக் கையகப்படுத்திச் சேகரிப்பது ;

(2) குருமார்களிடம் இருந்து சீடர் சந்ததியினர்க்கும் உறவினர்க்கும் மடாலயத்தின் சொத்துக்கள் உடமைகளாக வழிவழியாகப் போய்ச் சேர்வதை விதிகள்மூலம் உறுதி செய்வது ;

(3) ஒரு நிலப்பிரபுத்துவ மதச்சார்பற்ற அரசு அமைப்பின் மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் தன்னுள் பல அதிகார மட்டங்களை அடக்கிய ஓர் அமைப்பைக் கட்டியெழுப்புவது

ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அதிகாரத்துக்கான விழைவும் அந்தஸ்துக்கான விழைவும் கலந்துவிடும் போக்கை இவற்றின்மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அண்மைக்காலத்தில் பௌத்த மத சங்கம் அரசின் ஓர் அங்கமாகவே மாறிவிட்டதும் இந்தப் போக்கை உறுதி செய்கின்றன.

எனவேதான் இலங்கையில் நாம் அரசியல் பிக்குகளை (political monks), எங்கும் காணமுடிவதில் வியப்படைய வேண்டியதில்லை. பௌத்த மத சங்கம் அரசுக்குள்ளும் சமூகத்துள்ளும் இணைந்து விடும் போக்கை இந்த அரசியல் பிக்குகள் பிரதிபலிக்கின்றனர்.

இப்போக்கின் கலாச்சார வெளிப்பாடாக ஒரு குறிப்பிட்ட தொடர்பு மொழியிலேயே - பாலி மொழியிலேயே-அவர்கள் தங்கி நிற்பதைக் (fixation) கூறலாம். மேலும் விலக்கப்பட்ட நூல்களாக (heretical teachings) சிலவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதும், அவற்றைத் தவிர்த்த நூல்களை மூலப்பிரதிகளாக (canon of texts) ஏற்றுக்கொண்டு அவற்றிலேயே தங்கியிருப்பதும், அவற்றுக்கான உரைநூல் மரபு என்று ஒன்றை மட்டுமே ஏற்றுக் கொண்டிருப்பதும் சில கொள்கைகளில் மட்டுமே அவர்கள் தங்கிநிற்பதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் இதே தங்கிநிற்றலின் வெளிப்பாடுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம் :

1. இவ்வுலக அறிவுத்துறைகளான சோதிடம், இலக்கணம் கவிதை, உரைவீச்சு, மருத்துவம், பொருளாதாரம்,



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் கோட்பாடு ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களையும் வழிமுறைகளையும் பயன்படுத்தக் கூடிய கற்றறிந்த பிக்குகளின் எழுச்சி ;

2. பௌத்த மத சங்கத்துக்கு என்று ஒரு நிலப்பிரபுத்துவ அமைப்பைக் கட்டியெழுப்பியிருத்தல் ;

3. அதிகாரம் செலுத்தும் சாதியாக உள்ள உயர் அந்தஸ்துள்ள சாதியிலிருந்தே சங்கத்தின் பிக்குகள் தேர்தெடுக்கப் படுதல் ;

4. சாதிய ரீதியாகக் குறைந்த அந்தஸ்துள்ள குழுக்களுக்குச் சடங்குகளின் போது கூடுவதற்கான உரிமைகள் மறுக்கப்படுவதும், அவர்களுக்கு குறிப்பிட்ட இடங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புக்கள் மறுக்கப் படுவதுமான போக்குகள் ; இப்போக்குகளை உறுதி செய்யும் சாதிய உறவுகளைத் தன் உள்ளமைப்பாக பௌத்த மத சங்கம் கொண்டிருத்தல் ஆகியவற்றைக் கூறலாம்.

பௌத்த மத சங்கம் அரசுடனும், சமூகத்துடனும் எப்படி இணைந்தது என்பதை மகாவம்ச மரபைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். இதன்மூலம் பௌத்த மத சங்கம் அரசிலும், சமூகத்திலும் செலுத்தும் அதிகாரத்தை வெளிப்படையாகக் கண்டு கொள்ளலாம். பௌத்த மத சங்கம் செலுத்தி வந்துள்ள அதிகாரம் எப்படிப்பட்டது என்றால், அது அச் சங்கத்தால் எழுதப் பெற்றதே இலங்கை மக்களின் அதிகாரப்பூர்வமான வரலாறாகக் கருதப்படுகிறது. சங்கத்தின் அடிப்படை மதிப்பீடுகளே இன்று சமூகத்தின் முக்கிய அங்கமாகப் பிரதிபலிக்கப்படும் வகையில் சங்கத்தால் எழுதப்பட்ட வரலாறு அமைந்துள்ளது. மேலும் வரலாற்று ரீதியான இந்த எழுத்தில் துறவு பிக்குகளாகிய (assetic monks) பம்சுக்குலின்கள் காணப்படவில்லை என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட வேண்டும். (எனினும் உண்மையான வரலாற்றிலிருந்து இத் துறவிகளை ஒதுக்கிவிட முடியாது.) கிட்டத்தட்ட பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு மகாவம்ச மரபில் ஒரு சில குழுக்கள் மட்டுமே, அதிகாரம், அந்தஸ்து ஆகியவை வெவ்வேறானவை என்ற உண்மையை பௌத்த மத சங்கத்துக்கு அவ்வப்போது நினைவுறுத்தியும் சங்கத்தின் கோட்பாடுகளை எதிர்த்தும் வந்துள்ளனர்.

www.padippakam.com

எனவே இலங்கையில் அன்றும், இன்றும் அதிகாரம், அந்தஸ்து ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று பெறப்படுவன வாகவே உள்ளன என்று குணசிங்க கூறுவதில் ஓரளவு உண்மையும் உள்ளது. ஆனால் துறவுநிலையை விழைந்து கொண்டிருந்த பௌத்த மத சங்கத்தின் ஆதிகாலப் பார்வை யில் இது இருக்கவில்லை. நீண்ட நெடிய வரலாற்றுப் போக்கின் மூலமாகவே இந்த நிலை ஏற்பட்டு வந்துள்ள தைக் காணமுடிகிறது.

ஆயினும் இன்று துறவுநிலை என்ற கோட்பாடே பௌத்த மத சங்கத்துக்குக் குற்றமுள்ள நெஞ்சின் மனச் சாட்சியாக (bad conscience) மட்டுமே தெரிகிறது! இம் மனசாட்சி எப்படிப்பட்டதென்றால், பௌத்த மத சங்கம் தன்னை நேரடியாக ஒரு அரசியல் கட்சியாக அறிவித்துக் கொள்வதை இது தடுக்கிறது. இருக்கும் அரசியல் கட்சி களுடன் இடைநிலை இலட்சியவாத அமைப்புகள் மூலமாக உறவுகளை கொள்வதைத் தவிர்த்து, நேரடியான உறவுகளை வைத்துக் கொள்வதையும் இம் மனச்சாட்சி தடுக்கிறது.

எனவே இதுநாள் வரை பௌத்த மத சங்கம் தன்னு டைய அதிகாரத்தைப் பெற்றெடுத்து வந்த உயர் அந்தஸ் துக் குழுக்கள் வீழ்ச்சியடைந்து விட்டதால் இன்று சங்கத் தின் அதிகாரம் குறைந்துவிட்டது என்ற முடிவுக்கு நாம் வரக்கூடும். ஆனால் இந்த வாதத்தின்படியே பார்த்தால் புதிய அதிகாரக் குழுக்களின் எழுச்சியை இது கணக்கில் எடுக்கவில்லை என்பதையும் புரிந்துகொள்ள முடியும். இப் புதிய அதிகாரக் குழுக்களானவை, பௌத்த மத சங்கத்தின் மரபான ஆதரவுத் தளங்களிலிருந்து எழுச்சி பெறவில்லை; மாறாக, இன்று பௌத்த மத சங்கம் தன்னை எந்த சமூகத் தளங்களுடன் தொடர்பு படுத்திக் கொள்கிறதோ அவற்றி லிருந்தே இக்குழுக்கள் தோன்றியுள்ளன. பௌத்த மத சங்கம் இக்குழுக்களின் மூலமாகவே இன்று தன் அதிகாரத் தைச் செலுத்தி வருகிறது. எனவே பௌத்த மத சங்கத் தின் அதிகாரம் குறியீட்டு அளவிலேயே உள்ளது என்ற குணசிங்கவின் முடிவு தவறானது. மாறாக, இதுநாள்வரை பௌத்த மத சங்கம் அதிகாரத்தைப் பெற்றெடுத்து வந்த பழைய குழுக்களின் அதிகாரமே குறியீட்டு அளவினதாக மாறிவிட்டது. புதிய அதிகாரக் குழுக்களாக நாம் குறிப்பிடு வது எவையெவை ?



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையின் நவீன பௌத்தத்தின் அநகாரிக தர்ம பாலவின் மரபை எடுத்துக் கொண்டால், அதன் ஒரு முக்கிய அம்சமாக, பௌத்த மத சங்கத்தின் மரபாகக் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளுக்கு வெளியிலாக பௌத்த சாமான்யர்களின் அமைப்புக்கள், பிக்குகளின் அமைப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டதைக் கூறவேண்டும்.

இந்த அமைப்புக்களின் இறுதிக் குறிக்கோள் இலங் கையை ஒரு பௌத்த நாடாக மாற்ற வேண்டும் என்பதாகும். இதற்கான வழிமுறைகளாக பௌத்த சடங்குகளான பிரித்தை (பௌத்த மத நூல்களை பிக்குகளோ சாமான் யர்களோ படிக்கும் சடங்கு. கேட்பவர்களின் பாதுகாப்புக்காக இது நடத்தப்படுகிறது) நடத்துதல், தர்மதேசனாயனவ (போதனை) கேட்டல், போதிப்பூஜாவ (புத்தபகவான் ஞானம் பெற்றதைக் குறிக்கும் வகையில் நடத்தப்படும் சடங்கு) என்ற பூசையைச் செய்தல் ஆகியவற்றோடு அல்லாமல், இச் சடங்குகளுடன் அரசியல் கட்சிகளின் போராட்டங்களையும் இணைத்துச் செல்வதையும் இவ்வமைப்புக்கள் மேற் கொள்கின்றன. அதாவது, இன்று வடக்கிலுள்ள ''பயங்கர வாதத்தை'' எதிர்த்துப் போராடும் நோக்கத்தில் அழைக்கப் பட்ட ஒரு கூட்டத்தில் போதிபூஜாவ முக்கியச் சடங்காகக் கருதப்படலாம். (பௌத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி யும், பௌத்த மத சங்கத்தின் உறுப்பினர்களுக்கு உள்ள தொடர்புகளைப் பயன்படுத்தியும், திட்டவட்டமான குறிக் கோள்களைக் கொண்ட இந்த அமைப்புக்கள் தங்கள் நலன் களைப் பொது நலன்களாக, ஏன் இலட்சியங்களாகவே, மாற்றிக் காட்டுவதில் வெற்றியடைந்துள்ளன. அரசியல் கட்சிகளின் ஆதரவை அவ்வப்போது பெற்றுவரும் இந்த ''இலட்சியவாத'' அமைப்புக்களின் திட்டவட்டமான நலன் கள், வர்க்க நலன்களாகவோ, சாதிய நலன்களாகவோ, குடிப்பழக்கத்தை ஒழித்தல் போன்ற அறநெறி தொடர்பான நலன்களாகவோ, தொழிற்சங்கங்களில் புகவேண்டிய தேவை யாகவோ, இளைஞர் மற்றும் பெண்கள் அமைப்புக்களில் நுழைய வேண்டிய தேவையாகவோ, சாதாரண அரசியல் நலன்களாகவோ, வேறு எதுவாகவோ இருக்கக் கூடும்.

பௌத்த மத சங்கத்தின் பிரதிநிதிகள் இவ்வமைப்புக் களில் தலைவர்கள், புரவலர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அல்லது சாதாரண உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புகளில் அமர்ந்து கொண்டு அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

முன்பு பௌத்த மத சங்க உறுப்பினர்கள், சாதி அமைப்பின் உயர் மட்டங்களுடனும், 19-ஆம் நூற்றாண்டில் கரையோரப் பிரதேசங்களிருந்த பொருளாதார ரீதியாகச் சக்தி வாய்ந்த குழுக்களுடனும் தொடர்பு கொண்டு அரசவை மூலமாகவும், மேல் குடியினர் மூலமாகவும் அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். தற்காலத்தில் நவீன சமுதாயத்தில் இயங்கிவரும் பலவகைப்பட்ட அழுத்தக் குழுக்கள் (pressure groups) மூலமாக அதிகாரத்தைச் செலுத்துகின்றனர்.

புதிய வழிமுறைகளில் அதிகாரத்தைச் செலுத்த பௌத்த மத சங்கம் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருப்பதன் மூலமாக அதன் அதிகாரங்கள் குறைந்து விட்டனவா என்று என்னால் கூறமுடியாது. ஆனால் இலங்கையின் அதிகார பூர்வமான வரலாற்றை மகாவம்சத்தின் 102வது அத்தியாயத்தில் இருந்து துவங்கி எழுதுவதற்கு சங்கத்துக்கு அதிகாரங்கள் இன்று இல்லை என்பதும் உண்மைதான். ஆனால் வேறு எந்த குழுவாலும் கூட இலங்கையின் அதிகார பூர்வமான வரலாற்றை எழுதவும் முடியாது என்பதுவும் உண்மையே. மேலும் அதிகார பூர்வமான வரலாறு என்ற கருத்தாக்கமே இன்று அர்த்தமிழந்து போய் நிற்கிறது.

இன்று ஒரு பிக்குவின் அரசியல் பிரச்சாரத்தின் வீச்சு என்பது அவரது தாயகசபாவுக்குள் (பரிசில் வழங்குவோரின் கூட்டம்) அடங்கி விடுகிறது. அந்தக் கூட்டத்தில் அவருக்கு ''எதிரான'' கட்சியைச் சார்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட இருக்கக்கூடும். ஆனால் இடைநிலை இலட்சியவாத அமைப்புக்களின் மூலமாக அரசியல் கட்சிகளிலும்கூட அந்த பிக்குவுக்கு ஓர் ஆதரவுத் தளம் இருக்கவே செய்கிறது.

எனவே பௌத்த மத சங்கத்தின்முன் இன்று நிற்கும் கேள்வியானது, ஒரு ஆதரவுத் தளத்தை எப்படிக் கட்டுவது என்பதல்ல; எந்த குறிக்கோளுக்காக தனது அதிகாரத்தை பயன்படுத்தவேண்டும் என்பதுதான். இன்று பௌத்தமத சங்கத்தின் திட்டவட்டமான குறிக்கோள்களாக இருப்பவை நாட்டின் ''ஒற்றுமையையும்'', ''இறையாண்மையையும்'' உறுதி செய்வதுதான். உலகைத் துறப்பதல்ல! இக் குறிக்கோள்களை அடைய பௌத்தமத சங்கம் இலட்சியவாத அமைப்புக்களுடன் உறவுகொண்டே ஆகவேண்டும். ஏனெனில் சங்கத்தால் ஒரு அரசியல் கட்சியாக மாறவோ, எந்த ஒரு அரசியல் கட்சியையும் நேரடியாக ஆதரிக்கவோ முடியாது.



படிப்பகம்

இவ்வமைப்புக்களால் பௌத்தமத சங்கத்தைத் தங்கள் நலன்களுக்காகப் பயன்படுத்த முடியும் என்று தோன்ற வில்லை. மாறாக பௌத்தமத சங்கமே இக்குழுக்களைப் பயன்படுத்துகிறது என்பதே உண்மை ஆகும். இதையே இன்னும் விரித்துச் சொல்வதானால் பௌத்தமத சங்கத்துக் கும் இக்குழுக்களுக்கும் பணிகளின் பரிமாற்றம் நடக்கிறது. அனைவருமே ஒருவரை ஒருவர் பயன்படுத்த முயல்கிறார்கள். இது உண்மையாகிவிடும் பட்சத்தில் மொத்த அமைப்பே ஒரு பயன்பாட்டு அமைப்பாக (manipulative structure) மாறி விடுகிறது. இதில் ஏதோ ஒரு பக்கத்தினரை மட்டும் அம்பலப் படுத்துவது என்பது பரிதாபகரமானதாகும்.

பௌத்தமத சங்கமானது தான் அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்றால் தனது பேரையும், புத்த பகவானின் பேரையும் இவ்வமைப்புகளுக்குக் குறியீடுகளாக வழங்க வேண்டியிருக்கிறது. இக்குறியீடுகளின் மூலமாக இக்குழுக் களின் (அல்லது பௌத்தமத சங்கத்தின்) உண்மையான குறிக்கோள்களும், நலன்களும் ''அருமையான'' இலட்சியங் களாக வடிவம் பெறுகின்றன. ஆக, இவ்வுண்மையான குறிக் கோள்கள் நியாயப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல் மாற்று மதிப்பீடுகளைப்பற்றிச் சிந்திப்பதன் தேவையும் ஒழித்துக் கட்டப்படுகிறது! பௌத்தம் என்பது அடிப்படையான கருத் தியல் பயன்பாடுகளுக்காகச் சிதைக்கப்படுகிறது. அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, முக்கிய பௌத்த கருத்தாக்கங் களுமேகூட ''மண்ணின் மைந்தர்களால்'' அவர்களது போக் கில் மறுவிளக்கம் பெற்று விடுகின்றன.

இவ்வாறு, புத்தபகவான் ஞானத்தைப் பெற்ற நிகழ்ச்சி யைக் கொண்டாடும் சடங்கு ''பயங்கரவாதத்தை'' எதிர்த்துப் போராடுவதற்கான உள்வாங்குச் சடங்காக (initiation ritual) மாற்றப்படுகிறது. ''ஓய்வுபெறாமல் பயணத்தைத் தொடர்க'' என்ற புத்தபகவானின் ஆசியானது, ஞானத்தைப் பெறுவதற்கு என்று இல்லாமல் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற் கான போராட்டத்துக்கான முழக்கமாக ஆக்கப்படுகின்றது. ''தானை ஒழி'' என்ற பௌத்தத்தின் கோட்பாடானது உல கைத் துறந்ததற்கான எடுத்துக்காட்டுச் சடங்காக சாவைத் தானாகவே விரும்பி ஏற்பதிலிருந்து மாற்றப்பட்டு, பயங்கர வாதத்தை எதிர்த்துப் போர்க்களத்தில் விரும்பிச் சாவதாக மறுவிளக்கம் தரப்படுகிறது.

www.padippakam.com

மேலும் உலகபெளத்த கழகத்தின் சிங்கள தேசியக் கிளை யானது அண்மையில் கொழும்பில் ஒரு பௌத்த வங்கியை ஏற்படுத்தி பௌத்தர் அல்லாதோரைப் பொருளாதார ரீதியாக எதிர்க்கத் தீர்மானித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போக்கானது பௌத்த கருத்தாக்கமான துறவுநிலை, அதிலும் சொத்துக்களையும் வன்முறையையும் கடந்த துறவு நிலை, என்பது இன்று நன்றாக ஓரங்கட்டப்பட்டு விட்டதையே தெளிவாக்குகிறது. பௌத்தம் என்பது மனிதகுல உய்வுக் கான வாழ்வுநிலையே என்ற முக்கியமான ஒரு பௌத்த கருத் தாக்கம் மாற்றப்பட்டு, சிங்கள இனத்தின் நலன்களுடன் இணைக்கப்பட்ட ஒன்றாக மறுவிளக்கம் பெற்றிருப்பதையும் நாம் காணவேண்டும்.

1930–களிலும் 40-களிலும் ஜெர்மனியிலுள்ள கிறித்துவ மரபில் நடந்த மாற்றங்களையும் இங்கு இத்துடன் நாம் இணைத்துப் பார்க்கவேண்டும். புரோடஸ்டென்டுகளில் ஒரு பிரிவினர் கிருத்துவத்தை ஜெர்மானியக் கிருத்துவமாக குறைத்து நாஜிகளின் யூத எதிர்ப்பு மற்றும் விஸ்தரிப்பு வாதம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி மறுவிளக்கம் தர முற்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# முடிவுரை

பௌத்தமத சங்கம் அதிகாரத்தைச் செலுத்தும் ஒரு வழிமுறையாகவே தா. பா. படை என்ற இடைநிலை அமைப்பை நாம் காணவேண்டும். தா. பா. படை அமைப்பு மூலம் பூர்ஷ்வா எதிர்க்கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சி, மகாஜன ஏக்சத் பெரமுன ஆகிய கட்சிகளை ஒன்றிணைப்பதில் சங்கம் வெற்றி கண்டுள்ளது. மேலும் ஜனதா விமுக்தி பெரமுனா அமைப்பும்கூட இந்த பூர்ஷ்வா எதிர்க்கட்சிக் கூட்டுக்குள் வரவேண்டி உள்ளது.

1984ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக அரசு நடத்திய அனைத்துக்கட்சி மாநாட்டைத் தடுத்துநிறுத்த சங்கம் தன்னால் ஆனதைச் செய்தது. தற்போது அரசு முன்வைத்துள்ள மாகாணசபைத் தீர்வு நடைமுறைப் படுத்தப்படுவதை நிறுத்திவிடவோ, தள்ளிப்போடவோ சங்கத்தால் ஏதாவது செய்யமுடியுமா என்பது அடுத்த சில மாதங்களில் தெரிந்துவிடும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் சங்கத்தின் அனைத்துத் தலைவர்களும் ஒரே நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அம் மாநாட்டில் அரசால் முன்மொழியப்பட்டிருந்த இணைப்பு—'சி' (Annexure—C) என்பதைச் சங்கமும் பிற சிங்கள அமைப்புக்களும் நிராகரித்து விட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. 1950-களில் மொழிப் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண முற்பட்டபோது அதை முறியடிக்க இதே பௌத்தமத சங்கம் மேற்கொண்ட வழிமுறைகளை நாம் மறந்துவிடமுடியுமா? ஆளுங்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள "மண்ணின் மைந்தர்கள்" மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன உட்பட்ட பூர்ஷ்வா எதிர்க்கட்சிகள் ஆகியவை அனைத்துமே மாகாண சபைத்தீர்வை எதிர்க்கின்றன. 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 23-ம் தேதி பௌத்த பிக்குகளின் ஊர்வலம் ஒன்று, சிங்களர்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டதால் ஜனாதிபதியை பதவிவிலகக் கோரி ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு ஊர்வலம் ஒன்றை நடத்தியதை இங்கு குறிப்பிடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் போராளிகளின் எதிர்ப்பை முறியடிக்காத வரையில் ''மண்ணின் மைந்தர்கள்'' இலங்கை இராணுவத்தின் ஒரு பகுதியினரோடு சேர்ந்துகொண்டு அதிரடிக்கிளர்ச்சி ஒன்றை நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றக் கூடிய அபாயத்தை ஜெயவர்த்தன அரசு எதிர்கொண்டுதான் இருக்கும். இந்த அபாயத்தைத் தணிக்க வேண்டுமென்றால் ஜெயவர்த்தன அரசு இராணுவ ஆக்கிரமிப்பு ஒன்றின்மூலம் நாட்டை ஒன்றுபடுத்தி ''சிங்களவர்களுக்கான அமைதியை'' ஏற்படுத்த ஒரு வேலைத்திட்டத்தை உடனடியாக முன்வைக்க வேண்டி இருக்கும். இலங்கையின் வெசாந்திரர் எங்கே?

## பிற் சேர்க்கை

# கோயில் மணி அடித்து வன்முறைக் கும்பல் தூண்டப்பட்டது

1987 மே முதல் தேதியன்று கொழும்பு நகரத்தில் நடந்த வன்முறை மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்களைப் பற்றி என்னால் எதுவும் எழுத இயலவில்லை. ஆயினும் டெய்லி நியூஸ் பத்திரிகையில் அடுத்த நாள் வந்த செய்தி களைத் தொகுத்துத் தந்துள்ளேன். ''கோயில் மணி அடித்து வன்முறைக் கும்பல்...'' என்ற செய்தி தா. பா. ப. அமைப் பினரைப் பற்றியதாகும். ''வன்முறையைத் தூண்டாதீர்...'' என்ற வேண்டுகோள் அரசுதரப்பு பௌத்த அமைப்பான சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சம்விதானயவால் விடப் பெற்றது. இவ்விரு செய்திகளும் முறையே பூர்ஷ்வா எதிர்க் கட்சியினர் மற்றும் அரசு தரப்புக் கருத்துக்களைப் பிரதி பலிப்பதால் இவற்றை ஒருசேரப் படித்தல் தேவை.

**கண்ணீர்ப்புகையும், ரப்பர் புல்லெட்டுகளும் கும்பலைத் தடுக்க இயலவில்லை.**

**கோயில் மணியடித்து வன்முறைக் கும்பல் தூண்டப் பட்டது.** (சிறிமால் அபேவர்த்தன)

கொழும்பு மே 2: நேற்று மதியம் அரசின் தடையுத்தரவை மீறி நரயன்பிட்டியில் நடத்தப்பட்ட மேதின ஊர்வலம் வன் முறையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் இறந்தனர்; நால்வர் காயமுற்றனர்.

அபயராம கோயிலிலுள்ளிருந்து போலீஸ் மீது கல்வீசி ரகளை செய்த ஒரு கும்பலைக் கட்டுப்படுத்தும் நோக்கத் துடன் போலீஸ் சுட நேர்ந்தது. முதலில் பல ரவுண்டுகள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினார்கள். பின்பு தடியடிப்



படிப்பகம்

www.padippakam.com

பிரயோகம் மேற்கொண்டனர். பின்பு ரப்பர் புல்லெட்டு களைச் சுட்டனர். அப்போதும் கூட்டம் அடங்காததால் குண்டுகளைச் சுட வேண்டியதாயிற்று. இறந்தவர்கள் பெண்டியமுல்ல கலனியாவைச் சேர்ந்த லெஸ்லி வென்னே வட்ட, மற்றும் ரணவாகா ஆகியோர். காயமடைந்த நால்வரில் ஒருவர் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அவர் பொது மருத்துவமனையில் உள்ளார்.

அபயராம கோயிலில் நடந்த கூட்டம் ம. சு. வி. இயக்கத் தாரால் நடத்தப்பெற்றுள்ளது. இவ்வியக்கம் அரசு இனப் பிரச்சினைக்காக முன்வைந்துள்ள தீர்வை எதிர்ப்பது தெரிந் ததே. கோயிலின் மடாதிபதி வண. முருட்டெட்டுவ ஆனந்த, செவிலியர் யூனியன் தலைவராவர். மகாஜன ஏக்சக் பெரமுன கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் பேசினார். போலிஸ் ஆணையாளர் கபூரும், அவருட னிருந்த பத்து கான்ஸ்டபிள்களும் கல்வீசித் தாக்கப்பட்டதில் காயமடைந்தனர். கபூருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு, இரண்டு தையலும் போடப்பட வேண்டியதாகிவிட்டது.

ஆயிரம் பேருக்கு மேல் கூடியிருந்தோரில் சுமார் 200 பேர் பௌத்த பிக்குமாராவர். அவர்கள் ஊர்வலமொன் றினை நடத்த வெளியேறத் தலைப்பட்டபோது, போலீசார் தடுத்தனர். பின்பு கோயிலுள்ளயே அனுமதியின்றி ஒலிபெருக்கிகள் உதவியுடன் பொதுக்கூட்டம் நடத்தினர். அதே சமயத்தில் போலீசார் தினேஷ் குணவர்த்தனவுடன் கலந்து பேசி பொதுக்கூட்டம் கலைந்து செல்ல வேண்டி யதன் தேவையை வலியுறுத்தினர். பொதுக் கூட்டத்தில் தினேஷ் குணவர்த்தன தவிர வண கெடிகல்ல பண்ணாதிஸ்ஸ நாயக தேரோ, வண மதுலோவாவெ சோபித, வண முருட்டேட்டுவே ஆனந்த மற்றும் வண பாலஹமுவெ சோமா ஆகியோர் பேசினர்.

வண. பண்ணாதிஸ்ஸ பொதுக் கூட்டத்தை முடித்துப் பேசி விட்டுக் கூட்டத்தினரைப் பார்த்துக் கலைந்து செல்லு மாறு கூறினார். அதற்குள் கூட்டத்தின் ஒரு பகுதியினர் கொந்தளிப்பாக ஆகி விட்டனர். கூட்டத்தினர் வீடு திரும்பு வதற்கு ஆறு பஸ்கள் தயாராக இருப்பதாகப் போலீசாரால் தினேஷ் குணவர்த்தனவிடம் கூறப்பட்டது. ஆனால் இது நிராகரிக்கப்பட்டது.

இதற்குள் கூட்டத்தினர் ஊர்வலமாகப் புறப்பட்டனர். ஊர்வலத்தின் முன்னணியில் பௌத்த பிக்குமார்கள் இருந்



படிப்பகம்

தனர். போலீசார் ஊர்வலத்தைத் தடுத்தவுடன் கல்வீச்சு துவங்கியது. போலீசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதைத் தொடர்ந்து, கோயில் மணி ஒலிக்கப்பட்டது! கொழும்பு டி. ஐ. ஜி. நீல் வீரசிங்கே, கோயில் மணி அடிக்கப் பட்டதன் மூலம், அண்டை அயலாருக்குக் கோயில் தாக்கப் பட்டதாக உணர்த்தப்பட்டது என்றார். பல திசைகளி லும் இருந்து கல்வீச்சு துவங்கியது. கண்ணீர்ப்புகை குண்டுகள், தடியடிப் பிரயோகத்துக்குப் பிறகு ரப்பர் புல்லெட்டுகளும் பயனளிக்காமல் போகவே, கடைசியில் குண்டுகள் சுடப்பெற்றன.

இருபதே நிமிடங்கள் நடந்த இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கூட்டம் ஒரு கட்டுக்குள் அடங்கியது. ஐந்தைந்து பேராகக் கலைந்து சென்றார்கள். கடைசி 25, 30 பேர் ஒரு பஸ்ஸில் சென்றார்கள். நான்கு போலீஸாரும், கபூரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டனர்.

''வன்முறை வேண்டாம்! அரசின் அமைதிப் பணிக்கு ஆதரவு தாரீர்!''

சமஸ்த லங்கா சிங்கள பௌத்த சம்விதானய இயக்கம் மக்களை வன்முறையில் ஈடுபடாதவாறு கேட்டுக் கொள் கிறது. இலங்கைத் தீவிற்கு அமைதி திரும்புவதற்கான அரசின் திட்டத்துக்கு ஆதரவு தருமாறு கேட்டுக் கொள் கிறது!

அமைப்பின் தலைவர் எட்மண்ட் பனகோட பிற தலைவர் களுக்கு விடுத்த வேண்டுகோளில் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்: ''சில சந்தர்ப்பவாதிகள் மக்களைத் தூண்டி விட்டு ஊர்வலம் நடத்துகிறார்கள்.''

''பிற நாடுகளில், இம்மாதிரியான சமயங்களில் அர சானது பத்திரிகைச் சுதந்திரத்தை ரத்துச்செய்து, அரசியல் கட்சிகளையும் கட்டுப் படுத்தியிருக்கும். ஆனால் இலங்கை யில் அவ்விதமான கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. நமது அரசு நியாயபூர்வமாகவும், ஜனநாயக ரீதியாகவும் நடந்து வருகிறது என்பதற்கு இதுவே ஒரு எடுத்துக் காட்டாகும்''.

''சில அரசியல் சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு நமது ஜனாதிபதியை ராஜினாமா செய்யச் சொல்கிறார்கள். இது முற்றிலும் தவறான போக் காகும். அத்தகைய செயல் நாட்டின் அண்மைக்கால குழப்ப நிலைமைகளை மேலும் சிக்கலாக்கும் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளோம்.''

□ □ □

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சிங்கள பௌத்த இனவெறி தீவிரவாதம்

தமிழ்த் தேசிய இனத்தின் மீது தீராத பகைமை மேற்கொண்டிருக்கும் சிங்கள அரசியல் கட்சிகள், அக் கட்சிகளின் ஆயுதப் பிரிவாக செயலாற்றும் தீவிரவாதக் குழுக்களின் ஊற்றுக்கண் சிங்களச் சமுதாயத்தில் எங்கு எப்படித் தங்கியிருக்கிறது என்பதைக் காணவும் மற்றும் சமூகக் காரணிகளை ஆராயவும் இந்நூல் துணையாக இருக்கும்.

சிங்கள மக்கள் மத்தியில் பௌத்தமத நிறுவனம் அதிகாரத்தை எவ்வாறு பெறுகிறது, எப்படி ஆட்சி செய்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும் மேலான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் பௌத்த மதத்தையும் பௌத்த பிக்குகளையும் அடை யாளம் காண்கிறோம்.

தாய்நாட்டுப் பாதுகாப்பு என்பது தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிராகப் போர்த் தொடுப்பதுதான் என்பதை மீண்டும் மீண்டும் சிங்கள அரசியல் வாதிகள் பௌத்தமத பிக்குகள் நிரூபிக்கிற செயலை அறிய முடிகிறது. புத்தரின் புனித மொழிகளையும் மற்றும் மதச் சடங்குகளையும் இனவெறிப் போக்குகளுக்கு ஆதர வாகப் புதுப் பொருள் தந்து தமிழர்களுக்கு எதிராக மாற்றுவதையும் ஆதாரங்களோடு இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன.

படிப்பகம்